# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I    Issue 10    January 2012

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்


லைப் டிவைன் .......... 2
இம்மாதச் செய்தி .......... 18
சாவித்ரி .......... 19
யோக வாழ்க்கை விளக்கம் VI .......... 21
பூரணயோகம் - முதல் வாயில்கள் .......... 26
லைப் டிவைன் - கருத்து .......... 29
அஜெண்டா .......... 31
அன்பு அமிர்தமாகி
அபரிமிதம் அனந்தமாகும்
அழைப்பு .......... 34
தமிழ்நாட்டுப் பழமொழிகளும்
ஸ்ரீ அரவிந்தமும் .......... 46
அன்பர்களும் அன்றாட வாழ்க்கை
நெறிமுறைகளும் .......... 47
கயமைக்குப் பரிசு .......... 50
நல்லெண்ணத்தைப் பற்றிய
குறிப்புகள் .......... 62


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

**ஆயுள் நீடித்தால் ஸ்ரீ அரவிந்தம் பலித்துள்ளது என்று பொருள்.**

**எதுவும் இல்லாமல் எதையும் செய்யும் பொழுது மனிதன் பிரம்மமாகிறான்.**

**இதுவரை நடந்த அற்புதம் விளங்கினால் வாழ்வு இனி அற்புதமாகும்.**

**உள்ளும், புறமும் உணர்ந்து செயல்பட்டால் முடியாதது உடனே முடியும்.**

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXII. The Problem of Life

We have data before us. Page No.212
We can see the difficulties Para No.7
It arises from the imperfect poise of Consciousness and Force.
Man's present status raises this.
It is a status of mind and life.
They are principally three.
First he is aware of only a small part of his being.
He has a surface mentality.
He has surface life.
He has too a surface physical being.
He knows not even all that.

Below is the occult plane.
It is a surge of the subconscious mind.
It is a surge of the subliminal mind.



## 21. உயரும் வாழ்க்கை

நம்முள் உள்ள விஷயங்கள் சில.
நம் சிரமத்தை அறியலாம்.
ஜீவியமும், சக்தியும் குறையான நிலையிலிருப்பதால் அவை எழுகின்றன.
மனிதனின் இன்றைய நிலை இதை உருவாக்குகிறது.
மனமும் வாழ்வும் உள்ள நிலையிது.
அவை முக்கியமாக மூன்று.
தன் ஜீவனின் சிறு பகுதியை மட்டும் மனிதன் அறிவான்.
மேலெழுந்த மனம் உண்டு.
மேலெழுந்த வாழ்வுண்டு.
மேலெழுந்த உடல் வாழ்வும் உண்டு.
மனிதன் தன் மேல் மனத்தையும் முழுமையாக அறியமாட்டான்.
அதன் கீழ் கண்ணுக்குத் தெரியாத சூட்சும லோகமுண்டு.
ஆழ்மனம் வீறிட்டெழுவது அது.
அடிமனம் வீறிட்டெழுவது அது.

There are his subconscious life-impulses.
There are his subliminal life-impulses.
There is his subconscious corporeality.
It is a large part of himself.
He does not know them.
He cannot govern them.
They know him.
They govern him.
Existence, consciousness and force are one.
We are identified with them by self-awareness.
Our power is in the measure of that.
The rest are subliminal.
It is subliminal to our mind, life and body.
The rest must be governed by its own consciousness.
The two are one movement.
They are not two separate movements.
One is larger and more powerful.
The other is smaller and less powerful.
Therefore we are governed by them.
Even in our conscious existence they prevail.
We have self-mastery.
We have self-direction.
Even there we are only instruments.
There is the Inconscient in us.
We are its instruments.



ஆழ்மன வாழ்வின் உந்துதல்கள் உண்டு.
அடிமன வாழ்வின் உந்துதல்கள் உண்டு.
ஆழ்மன உடலுண்டு.
இவை மனிதனின் பெரும் பகுதி.
மனிதன் அவற்றை அறியமாட்டான்.
அவனால் அவற்றை ஆள முடியாது.
அவற்றிற்கு அவனைத் தெரியும்.
அவை அவனை ஆட்சி செய்கின்றன.
வாழ்வு, ஜீவியம், சக்தி ஒன்றே.
நாம் அவற்றுடன் தன்னை அறிந்து ஐக்கியமாகிறோம்.
அந்த அளவில் நமக்குப் பவருண்டு.
மற்றவை மனத்திற்கு அடியில் போய்விடும்.
மனம், வாழ்வு, உடலுக்கு அடியில் போய்விடும்.
நாம் ஐக்கியமானது போக உள்ள ஜீவியம் மீதியை ஆளும்.

இரண்டும் ஒன்றே.
அவை இரண்டும் தனித்தனி அல்ல.
ஒன்று பெரியது சக்தி வாய்ந்தது.
அடுத்தது சிறியது, சக்தி குறைவானது.
எனவே நாம் அவற்றால் ஆளப்படுகிறோம்.
நாமறிந்த வாழ்விலும் அவை நம்மை ஆள்கின்றன.
சிலவற்றில் நாம் நம்மை ஆள்கின்றோம்.
நாமே நம்மை வழிநடத்துகிறோம்.
அங்கும் நாம் கருவிகளே.
ஜட ஜீவியம் உண்டு.
நாம் அதன் கருவிகள்.

The old wisdom speaks of Nature. Page No.212
It says Men are compelled to follow Para No.8
their Nature.
Nature determines, in reality, all his works.
He does not work by his free will.
Man imagines he is the doer, it says.

Nature is the creative force of our consciousness.
It is the consciousness of the Being.
It is within us.
It is masked.
It is masked by his inverse movement.
It is an apparent denial of Himself.
They called it Maya.
Maya is the illusion-power.
The Lord is seated within the heart of all
existences.
It is turned as upon a machine.
It does so through His Maya.
This is how Maya is explained.
Man exceeds his mind.
It makes him one in self-awareness.
He thus becomes one with the Lord.
Thus the Lord becomes the master.
He is the master of his own being.
This is not possible in the inconscience.
Nor is it possible in the subconscient.



பழைய விவேகம் சுபாவத்தைப் பற்றிப் பேசுகிறது.
மனிதன் தன் சுபாவத்தைப் பின்பற்ற வேண்டும் என்பது
கட்டாயம்.
அவன் செயல்களைச் சுபாவம் நிர்ணயிக்கிறது.
சுதந்திரம் அவனுக்கில்லை.
அது மனிதன் சுதந்திரமாகச் செயல்படுவதாக நினைத்துக்
கொள்கிறான் என்கிறது.
சுபாவம் நம் ஜீவியத்திற்கு ஜீவனளிக்கிறது.
அது ஜீவனின் ஜீவியம்.
அது நம்முள் உள்ளது.
அது மறைந்துளது.
அதன் சலனம் தலைகீழேயுள்ளது.
கடவுளை மறுப்பதாக அது தெரிகிறது.
அதை மாயை என்றனர்.
மாயை என்பது இல்லாதது.
இறைவன் வாழ்வின் இதயத்திலுறைகிறான்.

அது இயந்திரம் போல் இயங்குகிறது.
அது மாயை மூலம் செயல்படுகிறது.
மாயையை இப்படிக் கூறுகிறார்கள்.
மனிதனால் மனத்தைக் கடக்க முடியும்.
அதனால் மனிதன் தன்னையறிய முடியும்.
இறைவனோடு அவன் அப்படி ஒன்றுகிறான்.
அவ்விதம் இறைவன் உலகை ஆள முடியும்.
தன் ஜீவனை அவன் ஆள முடியும்.
இது ஜடத்தில் முடியாது.
இது ஆழ்மனத்திலும் முடியாது.

It is to plunge into our depths.
It moves towards the Inconscient.
We must go inward.
Go to where the Lord is seated.
From there we must ascend.
It is still superconscient to us.
It is in Supermind.
There exists this unity.
There is the higher Maya.
It is the divine Maya.
It is the conscious knowledge.
It is knowledge in its law and truth.
It works in the subconscient.
It works by the lower Maya.
It is in the conditions of the Denial.
It seeks to become Affirmation.
It is willed in higher Nature.
The lower Nature works out.
There is an Illusion-Power.
It is of the divine knowledge.
It creates appearances.
It is governed by Truth-Power.
It is of the same knowledge.
It knows the truth behind appearances.
They are working.
They keep Affirmation ready for us.
Higher Nature knows and wills.



அது நம் ஆழத்தில் புதைவதாகும்.
அது ஜட ஜீவனை நோக்கிச் செல்லும்.
நாம் உள்ளே போக வேண்டும்.
இறைவன் உறையுமிடம் நாட வேண்டும்.
அதனின்று உயர வேண்டும்.
அது நாமறியாதது.
அது சத்திய ஜீவியத்திலுள்ளது.
இவ்வைக்கியம் அங்குள்ளது.
அங்கு உயர்ந்த மாயை உள்ளது.
அது தெய்வீக மாயை.
அது தன்னையறியும் ஞானம்.
அது சத்தியமான சட்டம்.
அது ஆழ்மனத்தில் செயல்படுகிறது.
அது தாழ்ந்த மாயை மூலம் செயல்படுகிறது.
அது மறுப்பிற்குரிய இடம்.
அது மறுப்பை மறுக்க முயல்கிறது.
உயர்ந்த மாயை முடிவு செய்கிறது.
தாழ்ந்த மாயை அதைச் செயல்படுத்துகிறது.
மாயையான சக்தியுண்டு.
அது தெய்வீக ஞானம்.
அது தோற்றம்.
அது சத்திய சக்தி.
அதுவும் அந்த ஞானத்தைச் சேர்ந்தது.
தோற்றத்தின் பின்னுள்ள சத்தியத்தை அது அறியும்.
அவையும் செயல்படுகின்றன.
அது மறுப்பை மறுத்துக் காட்டுகிறது.
உயர்ந்த இயற்கை அறியும், செயல்பட முடிவு செய்யும்.

Lower Nature works it out.
The divine knowledge has the Illusion-Power.
It is in the world.
It creates appearances.
The Truth-Power governs the appearances.
Both are of the same knowledge.
It knows the truth behind the appearances.
We are working towards the Affirmation.
The knowledge keeps the Affirmation ready.
Man is partial and apparent here.
He will find there something else.
There is the real and perfect Man.
He is capable of an entirely self-aware being.
It is by his full unity with the Self-existent.
He is the omniscient Lord.
He knows His own cosmic evolution and procession.

There is a second difficulty. Page No. 213
It is man is separated in his mind. Para No.9
He is separated from the universe.
He is so in his mind, life and body.

Therefore he does not know his fellow creatures.
Already he does not know himself.
He has a mental construction of them.



தாழ்ந்த இயற்கை அதைச் செயல்படுத்துகிறது.
தெய்வீக ஞானம் மாயையின் சக்தியைப் பெற்றுள்ளது.
இந்த ஞானம் உலகிலுண்டு.
இது தோற்றத்தை எழுப்பும்.
சத்திய-சக்தி தோற்றத்தை ஆளும்.
இரண்டும் ஒரே ஞானத்தைச் சார்ந்தவை.
தோற்றத்தின் பின்னுள்ள சத்தியத்தை அது அறியும்.
மறுப்பை மறுக்கும் செயலில் நாம் முன்னேறுகிறோம்.
இந்த ஞானம் இலட்சியத்தைத் தயாராக வைத்துள்ளது.
மனிதன் பகுதியான தோற்றம்.
அங்கு இவன் காண்பது வேறு.
அங்கு உண்மையான சிறப்பான மனிதனுண்டு.
முழுவதும் தன்னையறிய அவனால் முடியும்.
சுய வாழ்வுடன் முழு ஐக்கியத்தால் அவன் அவை அறிவான்.
அவன் எல்லாம் அறிந்த இறைவன்.
தன் பிரபஞ்சப் பரிணாமத்தையும் அவன் வளர்ச்சியையும்
அவன் அறிவான்.

இரண்டாவது பிரச்சனையுண்டு.
மனித மனம் பிரிந்துள்ளது.
அவன் பிரபஞ்சத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளான்.
அவனது உடலும், வாழ்வும், மனமும் அப்படி
பிரிக்கப்பட்டுள்ளது.
அவனால் உடனுள்ளவர்களை அறிய முடியாது.
ஏற்கனவே மனிதன் தன்னையறியான்.
அவன் அவர்களைப் பற்றி மனத்திற்குரிய
கருத்துடையவனாகிறான்.

It is rough.
This is by some kind of sympathy.
This is by an imperfect capacity.
This is by inferences, theories and observation.

But this is not knowledge.
We are consciously aware of ourselves to some extent.
Knowledge can come only by identity.
It is the true knowledge.
It is existence aware of itself.
The rest is hidden.
We become one in our consciousness.
We can really come to know that.
It can be known only so far we can become one.
As is the means of knowledge, so is the knowledge.
They can be indirect.
The knowledge too will be indirect.
The means may be imperfect.
The knowledge too will be imperfect.
It will enable us to work.
It will be precariously clumsy.
We have a mental standpoint of view.
There are limited practical aims.
There are necessities.
There are conveniences.
We are related with what we know.
It is imperfect.



இது குத்துமதிப்பானது.
ஒரு வகையான அனுதாபத்தால் இது எழுகிறது.
குறையுள்ள திறமையாலெழுவது இது.
கண்டும், சிந்தனை செய்தும், உத்தேசமாகவும் அவன் இதை அறிகிறான்.
ஆனால் இது ஞானமாகாது.
ஓரளவு நாம் நம்மைத் தெளிவாக அறிவோம்.
ஞானம் ஐக்கியம் மூலமே வரும்.
அதுவே உண்மையான ஞானம்.
வாழ்வு அங்ஙனம் தன்னையறிகிறது.
மீதி மறைந்துள்ளது.
நாம் நம் ஜீவியத்தில் ஒன்றாவோம்.
நாம் அதை உண்மையில் அறியலாம்.
ஒன்றுபடும் அளவுக்கே அதை அறிய முடியும்.
நம் ஞானம் நாம் பயன்படுத்தும் கருவியைப் போன்றது.
அவை மறைமுகமானதாக இருக்கலாம்.
ஞானமும் மறைமுகமாக இருக்கும்.
கருவி குறையுடையதாக இருக்கலாம்.
ஞானமும் குறையுடையதாக இருக்கலாம்.
நாம் செயல்பட அது உதவும்.
அது நிலையற்ற குழப்பமாக இருக்கும்.
நமக்கு மனம் கொண்ட நோக்கமுண்டு.
அளவுக்குட்பட்ட நடைமுறை நோக்கங்களுண்டு.
தேவைகளுண்டு.
வசதிகளுண்டு.
நாம் அறிந்ததுடன் உறவுண்டு.
அது குறையுடையது.

It is an insecure harmony.
There is a conscious unity.
It can help us to arrive at a perfect relation.
We must achieve it with our fellow beings.
Our mental knowledge creates an understanding.
It is created by a sympathy of love.
It will be superficial.
Therefore it will be imperfect.
It is subject to frustration and denial.
It is by the uprush of the unknown.
It is by the unmastered from below.
It is from the subconscient and subliminal in us.
There is the universal in us.
We are one with it.
We can enter into that.
It can be a conscious oneness.
The superconscient is there in us.
The fullness of the universal exists only there.
It is conscient.
It is in the Supermind.
Man lives in his normal being.
Its greater part is subconscient.
Man cannot possess it in his normal mind.

It is so in his mind, life and body.
The lower conscious nature is bound.
It is bound in all activities.



அது நிலையற்ற சுமுகம்.
நாம் முழுவதும் அறியும் ஐக்கியமுண்டு.
ஒரு சிறப்பான உறவைப் பெற அது உதவும்.
மற்ற மனிதருடன் நாம் ஒரு ஐக்கியத்தை அடைய வேண்டும்.
மனத்தின் அறிவு பிறரை அறிய உதவுகிறது.
அது அன்பின் ஆதரவால் எழுந்தது.
அது மேலெழுந்தவாரியானதாகும்.
அதனால் அது குறையுடையதாகும்.
அது விரக்திக்கும், மறுப்பிற்கும் இடம் தரும்.
தெரியாதது எழுவதால் அது நடக்கிறது.
கீழிருந்து நமக்குக் கட்டுப்படாததால் எழுவது அது.
நம் அடிமனத்திலிருந்தும், ஆழ்மனத்திலிருந்தும் வருவது அது.
பிரபஞ்சம் நம்முள் உள்ளது.
நாம் பிரபஞ்சத்துடன் ஒன்றியுள்ளோம்.
நாம் அதனுள் நுழையலாம்.
அது நாமறியும் ஐக்கியமாகும்.
நம்முள் பரமாத்மாவுள்ளது.
பரமாத்மாவில் பிரபஞ்சம் முழுமை பெறுகிறது.
பரமாத்மா தன்னையறியும், பிரபஞ்சத்தையறியும்.
அது சத்தியஜீவியத்திலுள்ளது.
மனிதன் என்றும் போல வாழும் வாழ்வுண்டு.
அதன் பெரும் பகுதி ஆழ்மனம்.
அதை மனிதன் அவன் வழக்கமான மனதால் ஆட்கொள்ள முடியாது.
இது மனம், வாழ்வு, உடலுக்குப் பொருந்தும்.
தன்னையறியும் தாழ்ந்த சுபாவம் கட்டுண்டது.
எல்லாச் செயல்களிலும் அது கட்டுண்டது.

It is bound down to ego.
It is chained triply.
The individuality is differentiated.
It is tied to its stake.
The Supermind has the unity.
It has diversity.

*Contd....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

- அன்பை செலுத்துவது ஆனந்தம்.
- வெளியே செல்லும் அன்பு உள்ளே அருளை ஈர்க்கும்.
- அன்பைப் பெறுவது ஆனந்தம்.
- பெற்ற அன்பை செலுத்துவது உயர்ந்த வாழ்வு.
- அன்பின் செயல் அருளுக்கு அஸ்திவாரம்.
- அன்பைப் பெற அடுத்தவரை தயார் செய்வது அன்பு இல்லை; அருள்.
- மனிதனுக்கு தரும் அன்பைவிட பொருளுக்குத் தரும் அன்பு உயர்ந்தது; நிகழ்ச்சிகளும் அன்பைப் பெறும்.
- ஹிருதய சமுத்திரம் சக்தியான சமுத்திரம்.
- அன்னை அன்பான ஹிருதய சமுத்திரம்.
- பிரச்சனை தீர்க்க வரும் அன்னை, புயல்.
- நமக்காக வரும் அன்னை கடல் காற்று.
- அன்னைக்காக அவரை அழைப்பது, தென்றல்.
- தென்றலான அன்னை திகட்டாத அன்பின் அருள்.



அகந்தையால் அது கட்டுப்பட்டது.
மூவகையாக அது கட்டுப்பட்டது.
தனித்தன்மை பலவகையானது.
சுபாவம் தனித்தன்மைக்குக் கட்டுப்பட்டது.
சத்தியஜீவியம் ஐக்கியம் பெற்றது.
சத்தியஜீவியம் ஒன்றைப் பெற்றதைப் போல் பலவற்றையும் பெற்றுள்ளது.

*தொடரும்......*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

- தீர யோசனை செய்து சேர வேண்டும்.
- சேர்ந்தால் பிரியக் கூடாது.
- நம்மால் ஆதாயமில்லாவிட்டால் இனி நட்பு நீடிக்காது என்பது உறவல்ல.
- ஆதாயமில்லாவிட்டால் உறவு நெருக்கமாகும் என்பதே உறவு, நட்பு, பிரியம்.
- உன் உறவு நஷ்டம் கொடுத்தாலும் அது வேண்டும் என்ற நல்லெண்ணம் நஷ்டத்தை இலாபமாக்கும் திறனுடையது.
- ஆதாயம் இல்லை என்பதால் விலகக் கூடாது என்ற நல்லெண்ணம் ஆதாயத்தை உற்பத்தி செய்ய வல்லது.
- நட்பு நஷ்டத்தைக் கடந்தது.

*இம்மாதச் செய்தி*

**லைப் டிவைனை**

**(*The Life Divine*)**

**அனைவரும் அறியும்**

**நேரம் இது.**





## P.134 Obeying the push of unborn things towards birth

### கருவிலுள்ளவற்றை ஜனிக்கச் செய்யும் தாக்குதல்

☆ ஜடம் பெற்ற முத்திரையை உடைத்தெறிந்தாள்

☆ அவளாழத்தில் எழுந்த ஆத்ம வலிமையின் சிந்தனையற்ற ஊமையுணர்வு

☆ ஆழம் அறிவுறுத்துவதைச் சொல்லாலோ, குரலாலோ வடிக்க முடியாத நிலை

☆ அதையறிய விழையும் கண்மூடித்தனமான அவசியம்

☆ விலங்கான தளையை விவரமான கருவியாக்கினாள்

☆ சத்தியத்தின் கூடு அவளுடன் பிறந்த உணர்ச்சி

☆ திணறித் திக்குமுக்காடும் இருளின் முயற்சியும் வளர்ச்சியும்

☆ முழு இருளின் மீது விழிப்பையும் ஒளியையும் திணிக்கும் செயல்

☆ அவளிழந்த பொன்னான உரிமையின் ஏக்கத்தை

☆ மந்தமான ஜடத்தின் மடமைத்திறன் ஏற்க முயன்றாள்

☆ தளராத அவள் முயற்சி, கவலையுற்ற கலங்கிய அவள் நெஞ்சம்

☆ வழி தெரியாமல் அலையும் சுவடுகள், நிலை மாற நினைக்கும் உணர்ச்சி

☆ பெயரற்ற பேரின்பத்தை நினைத்து மகிழ்ந்து உருகும்

☆ இருண்ட அவள் கோயிலின் இன்ப அலை ஊற்று

☆ சிறு தேவதைகளைச் சமாளிக்க அவள் தரும் இரகஸ்ய சம்பிரதாயம்

☆ பயனற்ற தியாகத்தின் முடிவற்ற வாழ்வு

☆ மூடனான புரோகிதனின் அறிவற்ற செயல்

☆ விக்ரஹத்தின் முன் செய்யும் விதர்ணையற்ற திட்டம்

☆ திறனற்ற யாக குண்டத்துள் வைக்கும் குருட்டு நம்பிக்கை

☆ சிறிய பலன் கனக்கும் செவ்விய நடை

☆ தாங்க முடியாத அவள் சுமை நடக்கத் தயங்குகிறது

☆ காலம் கட்டாயப்படுத்துகிறது, அவள் நடையைத் தொடர்கிறாள்

☆ எண்ணம் விட்டு எண்ணம், தேவை மாறிய தேவை

☆ வளரும் தேவை வழங்கும் முன்னேற்றம்

☆ ஜடம் தந்த அதிருப்தி, அவளை மனத்தை நாடச் செய்தது

☆ பூமியை வென்று, சுவர்க்கத்தை நாடுகிறாள்

☆ சொரணையில்லை, செய்யும் வேலையை விட்டகன்றாள்

☆ உழலும் யுகங்கள் உவந்தளிக்கும் உழைப்பு

☆ எந்தப் பெரிய மாறும் ஜோதியும் வரக் காணோம்

☆ வழுக்கி விழும் அவளுக்கு வழிகாட்டும் ஆனந்தமில்லை

☆ ஏதோ ஒரு நேரம் மனத்தைத் தொடும் மின்னலெனும் ஜோதி

☆ நிலையற்ற தெய்வ நியதிக்கு நியாயம் கற்பித்தது

☆ காணாத உதயத்தை நாடும் காரிருள்

☆ தெய்வ நிலையைச் சுட்டும் கரிய இரகஸ்யம்

❀❀❀



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/54) மனத்தைக் கரைத்து பிரம்மத்தை அதிகமாகக் கண்டால் மனம் சத்தியஜீவியமாகிறது.**

☆ **மனம் கரைந்து பிரம்மம் எழும் சத்தியஜீவியம்.**

★ சிருஷ்டியை அறிய முயன்றவர் அதன் பெருமையைத் தம் அடக்கத்தால் அறிந்து "இது புரியாத புதிர்" என்று கூறினர்.

★ இன்றுவரை உலகம் ஜடத்தையே அறிகிறது.

★ சந்திரனுக்குப் போன பின்னும், 10,000 மைலை நொடியில் கடந்து பேச முடிந்தும், மேல் நாட்டார் வாழ்க்கையை அறியவில்லை.

★ பூமி, சூரியன், சந்திரன், செவ்வாய் கிரகங்கள் செல்லும் பாதையை வினாடி தவறாமல் அறிய முடிகிறது. 400 ஆண்டுகட்கு முன் எழுதிய ஹாம்லெட் நாடகத்தில் ஏன் நாயகன் தகப்பனார் கட்டளையை, அரை நிமிஷத்தில் நிறைவேற்றக் கூடியதை, முடிவு வரைத் தள்ளிப்போட்டான் என அறிய முடியவில்லை.

★ எப்படி இந்திய சுதந்திரம் போராட்டமின்றி நிறைவேறியது என்ற கேள்வியை 60 ஆண்டுகளாக எழுப்ப முடியவில்லை.

★ மனிதன் உற்பத்தி செய்த பணம், மனிதனை ஆட்டிப் படைப்பதை, மனிதனை அழிக்க முயல்வது ஏன் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

★ இக்கேள்விகட்கு பதில் அறிய வாழ்வின் சட்டங்களை

அறிய வேண்டும்.

- ★ உலகம் ஜடத்தை வென்று வாகை சூடுகிறது. அதைக் கடந்து வாழ்வை எட்டவில்லை.
- ★ மனம் வாழ்வைக் கடந்தது.
- ★ உலகில் எந்த அறிஞனும் மனம் என்றால் என்ன என்ற கேள்வியை இதுவரை எழுப்பவில்லை.
- ★ அது தெரிந்த பின்னரே மனம் எப்படி வேலை செய்கிறது என்பது எழும்.
- ★ சத்தியஜீவியம் மனத்தைக் கடந்தது.
- ★ சச்சிதானந்தம் சத்தியஜீவியத்தைக் கடந்தது.
- ★ பிரம்மம் முடிவானது.
- ★ பிரம்மம் எப்படிச் செயல்பட்டு, சிருஷ்டித்தது என்ற கேள்வியைச் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன் நம் முன்னோர் எழுப்பினர்.
- ★ அதற்கு விடை தெரியவில்லை எனக் கூறினர்.
- ★ பகவான் ஸ்ரீ அரவிந்தர் அப்பதிலைக் கூறுகிறார்.
- ★ பிரம்மம் அகம் புறமாய் பிரிந்து சிருஷ்டி ஏற்பட்டது என்கிறார்.
- ★ முதலில் சச்சிதானந்தமும், பிறகு சத்தியஜீவியமும், அதனின்று மனமும் எழுந்தன எனக் கூறுகிறார்.
- ★ மனம் கரைந்தால் எழுவது சத்தியஜீவியம்.
- ★ பிரம்மத்தை மனத்திலும் காணலாம், சத்தியஜீவியத்திலும் காணலாம்.
- ★ சத்தியஜீவியத்தில் பிரம்மத்தை மனத்தைவிட அதிகமாகக் காணலாம்.
- ★ சத்தியஜீவியம் என்ற முழுமை இரு கூறாகப் பிளக்கும்



பொழுது அவற்றிடையே மனம் உற்பத்தியாகிறது.

- ★ மனம் சத்தியஜீவியத்தைவிடச் சிறியது.
- ★ ஜடம், வாழ்வு, மனம், சத்தியஜீவியம், சச்சிதானந்தம் கரைந்தால் பிரம்மம் வெளிப்படும்.
- ★ ஜடம் பிரம்மம், வாழ்வு பிரம்மம், மனம் பிரம்மம், சத்தியஜீவியம் பிரம்மம், சச்சிதானந்தம் பிரம்மம்.
- ★ எது கரைந்தாலும் பிரம்மம் வெளிப்படும்.
- ★ மேலே போனால் பிரம்மம் அதிகமாக வெளிப்படும்.

✵✵✵

**II/55) ஜடமான மனிதன் தன் கண்ணோட்டத்தை மாற்றினால் ஜடம் திருவுருமாற்றமடைகிறது. அந்த நேரம் பிரம்மமும் சிருஷ்டியும் ஒன்றென அறிகிறோம்.**

☆ **சிருஷ்டியைப் பிரம்மமாக்கும் திருவுருமாற்றம்.**

- ★ பிரம்மம் சிருஷ்டியானது பிரம்மம் விரும்பிச் செயல்பட்டதால்.
- ★ சிருஷ்டி பிரம்மமாவதும் பிரம்மம் விரும்பிச் செயல்படுவதால்தான்.
- ★ சிருஷ்டி பிரம்மமாகத் திருவுருமாற்றம் வழியென்றாலும், செய்வது மனிதன்.
- ★ மனிதன் எடுக்கும் முடிவு, சிருஷ்டியை விட்டு பரிணாமத்தைத் தேடும் முடிவு.
- ★ பிரம்மம் கடவுள், கடவுள் எல்லாம் வல்லவர், அவரால் எதுவும் முடியும். பிரம்மத்தைச் சிருஷ்டியாக்க முடியும், சிருஷ்டியைப் பிரம்மமாக்க முடியும் என நாம் கொள்வது நம்பிக்கை. அது தெளிவு பெற்ற அறிவாகாது.

- ★ நம்பிக்கை அறிவைவிட உயர்ந்தது எனினும், அறிவு ஏற்பட்டபின் அதைக் கடந்து எழும் நம்பிக்கை உயர்ந்தது.
- ★ அறிவு ஏற்படுமுன் எழும் நம்பிக்கை பலன் தரும். ஆனால் அது மூடநம்பிக்கையை ஒத்தது. அதுவும் அறிவைவிட உயர்ந்தது.
- ★ பிரம்மம் தானே செயல்படும் - சிருஷ்டியாகும், பரிணாமமாகும் - என்றால் பரிணாமத்தில் மனிதனின் பங்கு என்ன என்றறிவது தெய்வீக ஞானம்.
- ★ அதை அறிவது, அறிந்து தெளிவது விஞ்ஞானம் எனவும் கூறலாம்.
- ★ நம்பிக்கையுடன் பரிணாமத்தை ஏற்றால் சத்தியஜீவியத்தை அடையலாம்.
- ★ சத்தியஜீவியத்தில் ஏராளமான நிலைகள் உண்டு.
- ★ அதன் முழுமை, முடிவு, சிறப்பு, உயர்வு இதனால் கிடைக்காது.
- ★ அதன் முதல் நிலை பலனாகக் கிடைக்கும்.
- ★ அன்பர்கள் பிரார்த்தனை பலிப்பது போல், அந்த நம்பிக்கை யோகப்பலனைத் தரும்.
- ★ அறிவு பெற்று, தெளிவு பெற்று, அறிவைவிட நம்பிக்கை சிறந்தது என உணர்ந்து, அறிவைக் கடந்து அந்நம்பிக்கையை ஏற்பது சிறப்பு.
- ★ இதைச் செய்வது திருவுருமாற்றம்.
- ★ திருவுருமாற்றம் பெற உதவுவது சரணாகதி.
- ★ சரணாகதி முழுமை பெற அன்னை யார் என்ற ஞானம் முழுமை பெற வேண்டும்.
- ★ அன்னை இயற்கை - பிரகிருதியின் தெய்வீக ஜீவியம்.
- ★ இயற்கையில் இறைவன் ஆழ்ந்து உறைகிறான்.



- ★ இயற்கை அதன் சக்தியால் செயல்படுகிறது.
- ★ புயல் வேகமாக அடித்து நாசம் விளைவித்து மக்களை உஷாராக்குகிறது.
- ★ இயற்கையின் தெய்வீக ஜீவியம் ஆழத்திலிருந்து சற்று எழுந்து வந்தால், புயல் உருவாகி, அமைதியாகி, மக்கள் மனத்தில் தெய்வ நம்பிக்கைக்கு உயிரளித்து, தெய்வத்தை நினைத்து அழைக்கச் செய்து, புயல் நாசத்தால் நெடுநாளில் விளைவித்த ஞானத்தை க்ஷணத்தில் மக்கள் பெற உதவும்.
- ★ அன்பர் அதைச் செய்யும் பொழுது புயல் அடங்கும். அவர் அன்னையைத் தெய்வீக இயற்கை ஞானமாக அறிகிறார். அன்னை எல்லாச் செயல்களிலும் எல்லா நேரத்திலும் அப்படிப்பட்டவர். நாசம் விளைவிக்கக் காத்திருக்க வேண்டாம் என அறிந்து அன்னையை முழுமையாக அறிந்து சரணாகதியை மேற்கொள்வதாகும்.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

***பிரிக்கும் சக்தி இணைக்கும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பற்றாக்குறை என்பதில்லை, பயன்படுத்தத் தெரியவில்லை என்பதே உண்மை.

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 54. பூர்வ ஜென்ம ஞானம்

- ஞாபகம் பிறப்புக்கு முன் இல்லை.
- இறப்புடன் ஞாபகம் முடிகிறது.
- மனித வாழ்வு பிறப்பில் ஆரம்பித்து, இறப்பில் முடிகிறது.
- நினைவு இவ்வெல்லைக்குள் செயல்படும்.
- மனத்தின் நினைவுக்கு இவை எல்லைகள்.
- அடிமனம் பிரபஞ்சத்தின் அளவு பரந்தது.
- அதற்கு நினைவு என ஒன்றில்லை.
- அடிமனம் ஒரே சமயத்தில் உலகம் முழுவதும் காண வல்லது.
- அதனால் அதற்கு நினைவு என ஒன்று தனியாகத் தேவையில்லை.
- சைத்திய புருஷன் அடிமனத்தில் உறைகிறான்.
- பூரணயோகம் சமர்ப்பணத்தால் மேல்மனத்தினின்று அடிமனம் செல்ல வல்லது.
- அடிமனம் சென்றடைந்தவுடன் எல்லா முற்பிறப்புகளும், எல்லா வருங்காலப் பிறப்புகளும் தெரியும்.
- மேல்மனத்திற்கும், அடிமனத்திற்கும் இடையே உள்மனம் உண்டு.
- உள்மனத்தில் சாட்சி புருஷன் உறைகிறான்.
- இது ஆன்மீக லோகமல்ல, சூட்சும லோகம்.



- சூட்சும லோகம் என்பதால், பூர்வ ஜென்மத்தை அறியும் திறனுண்டு.
- கர்ணனுக்குத் தாயார் யார் எனத் தெரிந்துகொள்ளும் ஆசை அவனை அரித்தெடுக்கிறது.
- வெகுநாள் கழித்து அதைக் கிருஷ்ணன் மூலம் தெரிந்து கொள்கிறான்.
- அதன்பின் துரோணரைப் பார்க்க ஒரு சமயம் போன பொழுது, ''வா, குந்தி புத்ரா'' என்றார்.
- அவருக்குத் தன் பிறப்புத் தெரியும் என்பது கர்ணனுக்கு ஆச்சரியம்.
- துரோணர் ரிஷியில்லை, ஆச்சாரியன்.
- அவருக்குச் சூட்சுமம் தெரியும்.
- பிறப்பில் தவறுதலாகப் போன ஜென்ம நினைவு சிறிது வரலாம்.
- அவர்கட்கு இப்பிழையால் போன ஜென்ம விவரங்கள் சில தெரியும்.
- தவம் செய்பவர்க்கு இத்திறமை தவறாது எழும்.
- அன்னைக்கு இத்திறமையுண்டு.
- போன ஜென்மத்தில் சில சாதகர்களுடைய பிறப்பை அவர் ஒரு சமயம் கூறியுள்ளார்.
- அந்த நாளில் ஆசிரமத்திற்கு அன்னை தரிசனத்திற்காக வருபவர்களை அன்னை முதல் நாள் பால்கனி தரிசனத்திற்கு வரச் சொல்லுவார்.
- அப்படி ஒரு சாதகர் அவர் உறவினரை அழைத்து வந்தார்.
- பால்கனியில் அன்னை அவரைக் கண்டார்.
- பிறகு அந்தச் சாதகரிடம், ''உன் நண்பரைக் கண்டேன், உயரமாக தாடியுடனிருந்தார்'' என்றார்.

- ★ சாதகர், “என் நண்பர் குள்ளமானவர், தாடியில்லை” என்றார்.
- ★ மறுநாளும் பால்கனிக்கு அழைத்து வரச் சொன்னார்.
- ★ அன்றும் அவரை உயரமாக, தாடியுடன் கண்டார்.
- ★ அந்தச் சாதகரிடம், ‘‘நான் கண்டது உன் நண்பரின் பூர்வ ஜென்ம உருவம்’’ என்றார்.
- ★ யோகம் முதிர்ந்து பூர்வ ஜென்மம் ஒருவருக்குத் தெரியுமானால், அது அவருக்குப் பெரிய சித்தி.
- ★ அன்பருக்குத் தியானத்தில் பூர்வ ஜென்மம் தட்டுப்பட்டால், அவருக்கு யோகம் பலிக்கும் எனப் பொருள்.
- ★ நமக்கு நண்பர் உறவினர்களில் போன ஜென்ம தொடர்புள்ளவரிருப்பதுண்டு.
- ★ ஜாதகம் அதைக் கூறும்.
- ★ சில அன்பர்கள் பூர்வ ஜென்மத்தை அறியும் ஆவலுடையவர்கள்.
- ★ அவர்கள் பிரார்த்தனையால் அதைப் பெறுவதுண்டு.

*தொடரும்.....*

❃❃❃

### ஸ்ரீ அரவிந்த சுடர்

- ❊ நல்லதை உற்பத்தி செய்தபடியிருக்க வேண்டும்.
- ❊ நல்லவர்கட்கு அவற்றைத் தடையின்றி கொடுக்க வேண்டும்.
- ❊ நல்லது நானிலத்தில் பரவுவது நல்லது.





## நெதி, நெதி என்ற இந்தியச் சட்டம் நமக்குத் தெரிகிறது.

- ★ ரிஷிகள் பிரம்மத்தைக் காணும் முயற்சியில் வெற்றி பெற்று பிரம்மம் அசைவற்றது என முடிவு செய்து உலகை அக்கண்ணோட்டத்துடன் கண்ட பொழுது மரத்தையும், சிறுவனையும், குழவியையும், சிறுமியையும் கண்டு, “இதுவே பிரம்மம்” என்றனர்.
- ★ பார்வை கூர்மையானபொழுது ‘‘இதுவல்ல பிரம்மம், இதுவல்ல பிரம்மம்’’ என்றனர்.
- ★ ஆரிய முன்னோர் அன்று கண்டதை இன்றுவரை உலகம் காணவில்லை.
- ★ அத்துடன் அவர்களால் அறுதியிட்டு பிரம்மம் இதுதான் எனக் கூற முடியவில்லை.
- ★ ரிஷிகள் பிரம்மத்தை ஒரு புறத்தில் ‘‘இதுவே பிரம்மம்’’ எனவும், மறுபுறத்தில், “இது பிரம்மமல்ல” எனவும் கண்டனர் என பகவான் விளக்கம் கூறுகிறார்.
- ★ மனம் முழுமையைக் காண இயலாதது. அதனால் இருபுறமும் மாறி மாறிக் காண்கிறது.
- ★ மனத்திலிருந்து உயர்ந்து சத்தியஜீவியத்திற்குப் போய் பிரம்மத்தைக் கண்டால் மனிதன் பிரம்மத்தைக் காண முடியும். முழுமையான பிரம்மம் தெரியும்.
- ★ அது ஒரு புறம் அசைவற்றதாகவும், மறுபுறம் அசைவுள்ளதாகவும் தெரியும்.
- ★ குழந்தையைப் பாம்பிடமிருந்து காப்பாற்றியக்

கீரிப்பிள்ளையை அதுவே குழந்தையைக் கடித்துக் கொன்றது எனத் தவறாக அறிந்த தாயார் போல் பகுதியான பார்வை தவறான பார்வையாகிறது.

- ★ பார்வை முழுமை பெற்றால் முரண்பாடு உடன்பாடாகும்.
- ★ *The Life Divine*-இல் 5-ஆம் அத்தியாயம் மனிதனுடைய கடமை. அதில் வரும் கூற்று இது.
- ★ மனிதனுடைய கடமை பிரம்மத்தை முழுமையாகக் காண்பதாகும்.
- ★ சுமார் 18 வகையாக மனிதன் பிரம்மத்தைப் பகுதியாகக் காண்கிறான். இதுவும் அதில் ஒன்று.
- ★ ஒரு குழந்தையைக் கண்டு இது பிரம்மம் என்றாலும், இது பிரம்மமில்லை என்றாலும் இரண்டும் உண்டு.
- ★ அதன் பொருள்: பிரம்மம் ஒரே சமயத்தில் எதிரெதிரான இரு தோற்றம் பெறக்கூடியது.
- ★ தாயார் குழந்தையை அடிக்கிறாள். குழந்தை மீது பிரியமுடையவள் அவள் எனில் அடிப்பது அன்பின் வெளிப்பாடு என்றாகிறது.
- ★ அதை மனம் முழுமையாக உணர முடியாது.
- ★ சத்தியஜீவியம் முழுமையாக உணர முடியும்.
- ★ சத்தியஜீவியம் முழுமையாகக் காண்பதை மனம் சுட்டிக்காட்ட வேண்டும். அதை உணர்வது மனிதனுடைய கடமை என்ற கருத்தை இந்த அத்தியாயத்தில் 18 வகையாகக் கூறுவதில் இதுவும் ஒன்றாகும்.
- ★ மரணம் வாழ்விற்கு அமரத்துவமளிக்கிறது என்ற கருத்து இதனின்று எழுகிறது.
- ★ எலிசபெத் டார்சியைத் திட்டியது, டார்சிக்குத் திட்டாகத் தெரியவில்லை, உண்மையாகத் தெரிந்தது.
- ★ அவன் கண்ட ‘உண்மை’ முடிவில் நடந்தது.

❋❋❋





## Sri Aurobindo's atmosphere till Lake, Falsehood exhausts.

## பகவான் சூழல் லேக் எஸ்டேட் வரையுண்டு. பொய்மை வலிமையற்றுப் போகிறது.

- ★ சூழல் என்றால் என்ன? நகரப்புறத்துச் சூழல் நாட்டுப்புறத்திலில்லை. பண்பான குடும்பச்சூழல் பண்பற்ற ஊரிலிருக்காது. கல்லூரியில் படிப்புச் சூழலுண்டு. ஒரு மக்களின் மன இயல்பு நம்மையறியாமல் நம் மனத்தைத் தொடுவது சூழல்.
- ★ துடுக்கான குழந்தைகள் அன்பான குடும்பத்தில் வந்தால் துடுக்கை இழந்துவிடும். சூழல் வெளிப்படும்.
- ★ பவுடர் கம்பெனியில் வேலை செய்தால் மேலேயெல்லாம் பவுடர் வாசனையிருக்கும்.
- ★ அமைதியான சூழலில் அகராதியானவரும் பேச்சையிழந்து-விடுவார்.
- ★ தண்ணீர் பஞ்சமான ஊரில் மக்கள் மனம் வறண்டிருக்கும்.
- ★ ஆன்மீகச் சூழலில் சத்தியம் வலிமை பெற்றிருக்கும். பொய் வலுவிழக்கும்.
- ★ அன்னிபெசண்ட் அம்மையார் சிகாகோ அருகில் வந்தவுடன் ஆகாயம் கறுத்திருப்பதைக் கண்டார்.
- ★ ஆயிரக்கணக்கான மாடுகளை அங்குத் தினமும் கொல்கின்றனர். அச்சூழல் கறுமையாக உள்ளது.

அமெரிக்காவில் குண்டர்கள் வாழும் ஊர் அது.

உயிர்க்கொலை குண்டர் வாழ்வாகிறது.

- ★ வீட்டில் பணமில்லை, சுத்தமில்லை, சதா சண்டை போடுகிறார்கள், எதற்கும் பஞ்சம், பிள்ளைகள் படிக்க வசதியில்லை, பெண்கட்கு திருமண வாய்ப்பில்லை என்ற வீட்டிலிருந்து ஒருவர் அன்னையை ஏற்றுக் கொண்டால் அவர் முதலில் கூறுவதும் முடிவாகக் கூறுவதும் அன்னை சூழலை வளர்க்கும்.

  *முதலில்:*

  *நிலைமை எதுவும் மாறவில்லை. அனைவரும் சந்தோஷமாக இருக்கின்றனர்.*

  *முடிவாக:*

  *என்ன நடந்தது, எப்படி நடந்தது எனப் புரியவில்லை. பழைய பிரச்சனைகள் எதுவுமில்லை.*

  *சூழலால் வரும் பயன் இது. அன்னையை ஏற்றபின் வரும் பயன் பெரியது, நீடிக்கக் கூடியது.*

- ★ பொய்யே சொல்லாதவர் வீட்டில் சூழல் தானே எழுந்து அபரிமிதமாகச் செயல்படும்.
- ★ சுயநலம் சூழலுக்கு எதிரி. நல்லெண்ணம் சூழலை வரவழைக்கும்.
- ★ படிப்பில்லாத கிராமத்து ஏழை, பணக்கார உறவினர் வீட்டில் சென்னையில் கொஞ்ச நாள் தங்கியிருந்தால் அவன் அனுபவிக்கும் ஆயிரம் வசதிகளுக்கு அவன் அருகதையில்லை. கிராமத்திற்கு வந்தால் அது போகும்.
- ★ நம் முயற்சி, தகுதியின்றி அன்னையின் கருணையால் கற்பனைக்கெட்டாத வசதிகளைத் தருவது சூழல்.
- ★ கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்ற வழக்கு இதைக் கூறுகிறது.



- ★ மகாத்மா காந்தியைக் கண்டவர் கண நேரத்தில் மனம் மாறுவது அவர் சூழல்.
- ★ தெய்வ நம்பிக்கையுள்ள குடும்பங்களில், ‘‘எனக்குத் தெரிந்தவரை எத்தனையோ வருஷமாகத் தேள், பாம்பு, பூரான் எவரையும் தீண்டியதில்லை, விபத்து என ஏற்பட்டதில்லை, படுக்கையாகப் படுக்கும் வியாதி எவருக்கும் வந்ததில்லை’’ என்பது நம்பிக்கையின் சூழல்.
- ★ சுத்தமான சூழலில் தொற்று வியாதி வாராது.
- ★ புதுவைக்கு வந்தால் அன்னை நினைவு இயல்பாக எழுகிறது. எங்களூரில் அப்படியில்லை என்பது சூழல்.
- ★ புதுவையில் உள்ளபொழுது தினமும் ***The Life Divine*** படித்தவர் அவர் நாட்டிற்குப் போனபின் திரும்ப வரும்வரை அதைத் தொட முடியவில்லையெனக் கண்டார். இந்தியாவில் ஆன்மீகச் சூழலுண்டு. புதுவை புண்ணிய பூமி.
- ★ பொய் சொல்ல முடியாதவர் செய்யும் காரியம் கூடிவருவது மெய்யின் சூழல்.
- ★ ‘‘முழுப்பொய்யனும் என்னிடம் பொய் சொல்வதில்லை’’ என்பது மெய்யின் அகச்சூழலில் வாழ்பவர் அனுபவம்.
- ★ இயல்பான மன நிம்மதி, பொதுவாக நல்லெண்ணம், சுறுசுறுப்பு நல்ல சூழலுக்கு அடையாளம்.

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அன்னை மூலம் சென்றால் எவரையும் தவறாது அணுகலாம்.

# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **நான் ஒருத்தியிருப்பது எவருக்கும் நினைவில்லை**

அன்னை டென்னீஸ் கோர்ட்டிலிருந்து ஆசிரமம் திரும்பும் பொழுது வழியில் உள்ள கூட்டத்தில் நின்றார். ஆசிரம வாலிபன் விழுந்து, கழுத்தில் பெரிய எலும்பு முறிவு ஏற்பட்டு உடனே டாக்டர் பார்த்து முதலுதவி செய்து கொண்டிருந்தனர். அவர்கள் செய்கையைப் ''பாராட்டி'' அன்னை, "அனைத்தையும் குறைவறச் செய்திருக்கிறீர்கள், நானொருத்தி இருப்பது எவருக்கும் நினைவில்லை. என்னிடம் சொல்ல ஒருவருக்கும் தோன்றவில்லை" என்றார்.

அன்னை நமக்களிக்கும் சுதந்திரம் உலகில் காண முடியாதது. நாமாக எடுத்துக் கொள்ளும் சுதந்திரமில்லை. அவராகக் கொடுப்பது. அதுவும் ஆழத்தில் (substance) தருவது. அது இப்படியே செயல்படும்.

★ வீட்டில் எந்தப் பெட்டியையும் பூட்டுவதில்லை. அனைவரும் நேர்மையானவர். அது சுதந்திரம். நம் வீட்டாரைப் பணம், கணக்குக் கேட்பதில்லை. அவர்கட்குச் செலவு செய்யும் சுதந்திரமுண்டு.

- ஏராளமான பணம் அன்பர் கையால் நேர்மையாகச் செலவாகியது.
- மற்றொரு அன்பர் சுதந்திரமாகக் கம்பனியை அழித்தார். உறவினரான அன்பர் முழுத் திருடனாக இருந்தார். அனைவருக்கும் சுதந்திரமிருந்தது.



குடும்பத் தலைவரிடமிருந்து விஷயங்களை மறைக்கும் குணம் இதற்கெல்லாம் அஸ்திவாரம்.

★ அன்னையை மறந்து செயல்படுபவர் வாழ்க்கைக்கு அன்னை மையமில்லை. அவர்கள் சுயநலவாதிகள்.

★ இந்தத் திருட்டு உறவினர் இங்கிருந்து போனது அவருக்குப் பெரிய நஷ்டம். இந்த ஸ்தாபனத்தை விட்டுப் போனவர்கள் அனைவரும் - முதலாளி, பேராசிரியர், நண்பர் - எவ்வளவு பெரிய வாய்ப்பை இழந்தோம் என அறியார்.

***நமக்குப் போனவரெல்லாம் முக்கியமில்லை.***
***நாமும் அவர்களைப் போலிருக்கிறோம்.***
***அது தவறு.***
***அது நம் சந்ததிகட்குத் தவறு.***

✡ **மறதி**

- **மறப்பது சிறப்பு.**

நினைவாக மறப்பது யோகப் பயிற்சி.

பகவான் தான் உலகை விட்டுப் போவதை அன்னையை மறக்கும்படிச் செய்தார்.

வாடிக்கைக்காரர் குறைகளை எப்படி கன்ஸல்டண்ட் மறப்பது?

எதையும் நினைவில் கொள்ளாதவரையும், மறப்பவரையும் எப்படிப் புரிந்து கொள்வது?

எந்த வேலையிலும் நல்லது, கெட்டது, இரண்டுமற்றது என மூன்று நிலைகள் உள்ளன.

நாம் மட்டமானால் நம் கெட்ட எண்ணம் உயிர் பெறும்.

நாம் சரியானால் நாம் மறந்தது நம்மைப் பாதிக்காது.

இரண்டுமில்லாதபொழுது பலன் நம் மன நிலைக்கு வரும்.

*1. குறைகளையெல்லாம் மறந்து பிறர் திறமைகளை மட்டும் கருதினால் பெரும் நல்லது நடக்கும்.*

*2. நாம் இரண்டுமில்லாமல் இருப்பது கவனக் குறைவாக இருந்து நல்லதை இழப்பதாகும்.*

*3. நாம் சரியாக இருக்க எவருடைய குறையும் மனதில் எழக்கூடாது.*

இவ்வேறுபாடுகள் சூட்சுமமானவை.

*நல்லது, கெட்டது, இரண்டுமற்றது இவற்றின் வித்தியாசம் புரிவது சூட்சும யோகத் திறன்.*

இதனுள் ஒரு பெரிய லோகம் புதைந்துள்ளது.

✡ **"100 ரூ." சிறியது. மனம் மாறுவது நிலையாக சந்தோஷப்படுவது பெரியது.**

1 ஏக்கர் வாங்கப் போனேன். பார்ட்னர் 1000 ஏக்கர் வாங்க கட்டாயப்படுத்தினார். இந்த அம்சம் 1958-இல் அன்னையிடம் வந்ததிலிருந்து நமக்கு இருப்பதை அறிய முயன்றால் 8 reversalsஉம் புரியும். அப்பொழுது "100 ரூ." சிறியது எனப் புரியும். நம் வீட்டுப் பையனுக்கு அது போல் வந்தது மட்டமான சரக்கு என்பதால் தெளிவாக இருக்கவில்லை. வருஷத்தில் காலேஜ் ஆசிரியருக்கு $ 12,000 என்றால் 250 நாளுக்கு தினமும் $ 50 ஆகிறது. பள்ளி ஆசிரியருக்கு $ 4000 உள்ள நேரம். அதாவது $ 17 தினசரி இருக்கும்பொழுது அந்த வேலையிலிருந்து நம்மிடம் வந்தவருக்கு தினமும் $ 1000 வந்தது. அடுத்த வருஷம் $ 2000 ஆயிற்று. இது 100 மடங்குக்கு மேல் ஆகிறது. ஓர் அன்பர் தனக்கு ரூ.1,200/-இல் வேலை கிடைக்கும் என்றார். அதற்கு ஒரு வருஷம், 1½ வருஷம் ஆகும் என்றார். அதே ஒரு வருஷத்தில் $ 5000இல் வேலை கிடைத்தது. அது ரூ.200,000/-. 150 மடங்கு.



நடந்ததை ஊன்றிப் பார்த்தால் இந்த அம்சம் அனைவர் வாழ்விலும் உண்டு. உடல் ஆரோக்கியம், மனநிம்மதி, ஊரில் மரியாதை ஆகியவற்றில் பணத்தில் புரிவது போல் புரிவதில்லை. *புரிவது அரிது, ஏற்பது அதனினும் அரிது.* நடந்ததெல்லாம் அப்படியே என மனம் அறிய, விழிப்பு, உண்மை, உஷார், தெளிவு, நல்லெண்ணம், நல்லவராக மனத்தில் சத்தியம் வேண்டும். 30 நாட்கள் ஆழ்ந்து சத்தியத்தை மனத்தைக் கடந்த ஜீவன் ஏற்றால் இது தெரியும்.

✡ **நம்பிக்கை**

- **எனக்கே நடந்தால் நான் நம்புவேன் - உடல்.**

  **அடுத்தவரைப் பார்த்து கற்றுக் கொள்வேன் - உயிர்.**

  **எவரும் செய்யாவிட்டாலும் எனக்குப் புரிந்தால் ஏற்பேன் - மனம்.**

  நம் கிணறுகளைப் பார்த்து கிராமம் கற்கவில்லை - உடல்.

  ஒரு விவசாயி வாழை நம்மைப் பார்த்து 10 வருஷம் கழித்துப் போட்டான் - உயிர்.

  மல்லிகை சென்ட் நான் படித்துப் புரிந்து கொண்டேன் - மனம்.

  ஆன்மீகம், சத்தியஜீவியம் இவற்றைக் கடந்தது.

  கன்ஸல்டன்சி என்பது இல்லாததை உற்பத்தி செய்வது - ஆன்மீகம்.

  1200 ரூ. சம்பாதிக்க முடியாதவனுக்கு அமெரிக்காவில் 2 இலட்சம் சம்பாதிப்பது சத்தியஜீவிய திருவுருமாற்றம்.

  நமக்குள்ள மிகப்பெரிய திறமை மூலம் அன்னை செயல்பட அனுமதிப்பது இரகஸ்யம்.

டார்சி அதை எலிசபெத் விஷயத்தில் செய்கிறான். அவனது குறை கர்வம். அவனது மிகப்பெரிய திறமை உண்மை (sincerity). அவள் கூறியதின் உண்மையை ஏற்று அவமானத்தை அறிவாகக் கருதி மாற முயன்றான். அது உண்மை (sincerity). டார்சி எடுத்தது ஆன்மீக முயற்சி இல்லை. நல்ல மனிதனுடைய உண்மையான முயற்சி. அவனது குறையைக் காரமாக அவள் எடுத்துக் கூறியதை உண்மை என ஏற்று மாறினான். அவன் நல்லவனாக நடந்தான். அது நமக்குப் போதும்.

***ஒரு நல்ல உண்மையான உதயம் போதும்.***

✡ **காணாமற் போனதைக் கட்டாயம் கண்டுபிடி - அன்னை மூலம் மட்டும் கண்டுபிடி.**

- கண்டுபிடிப்பதைவிட அன்னை மூலம் கண்டுபிடிப்பது முக்கியம்.
- ஒரு காரியத்தை அன்னை மூலம் செய்வதற்கும், ஒன்று விடாமல் அன்னை மூலம் செய்வதற்கும் உள்ள இடைவெளி ஆரம்பத்திற்கும் முடிவுக்கும் உள்ளது.
- முதற் காரியம் செய்ய நம்பிக்கை வேண்டும், அடுத்ததைச் செய்ய முழு ஈடுபாடு வேண்டும்.
- உன் மூலமாக வராதது எனக்கு வேண்டாம் எனக் கூறுவது நமது உறவு பூர்த்தியாவது.

  அது மனித சுபாவத்திலில்லை.

  அன்னையில் அது எவருக்கும் பூர்த்தியாகும்.

  அதைக் கூற முடியுமென்றால் அன்னையை முழுவதும் ஏற்றதாகும்.

  இந்தியப் பண்பில் பெரிய அளவுக்கு அது



முதலாளி-தொழிலாளி, குடும்பத்தார், கணவன்-மனைவி, குரு-சிஷ்யன் உறவில் உண்டு. மேல்நாட்டில் எதிரானது உண்மை. எது மற்றவர் மூலம் வருவதானாலும் அது வேண்டாம். அவர்கட்கு அது சுயமரியாதை.

1. பணிந்து ஒன்றுவது.
2. தனித் தன்மை.

அறியாமையின் உயர்வு முதலில் கூறியது.

அறிவின் தெளிவு திறமையும், சிறப்பும் பெறுவது அடுத்தது.

அறிவு தெளிவு பெற்று அறியாமை செய்வதையே செய்ய அறிவைக் கடந்த பண்பின் பக்குவம் ஞானம் பெற வேண்டும்.

✡ **இலட்சணம்**

- எதிரான இலட்சணம்.

  வேலை செய்யாத ஆண் பிள்ளை.

  பிள்ளை மேல் பாசமில்லாத தாயார்.

  பிள்ளைக்குத் தாயார் மீதுள்ள பாசம் தாயாருக்குப் பிள்ளை மீதுள்ளதாக அர்த்தமில்லை.

  வறண்ட உள்ளத்தின் அடியில் ஆன்மீக சொரணை psychic sensitivity இருக்கும்.

  எதனுடனும் எதுவுமிருக்கும்.

  அன்னைக்கு Mother உரியது இல்லாத மனிதரில்லை.

  நம்மிடம் அது எது எனக் கண்டு அதை முழுவதும் அன்னைக்குச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

  எந்தக் குறையுள்ளது என்பது கேள்வியில்லை.

  எந்த நிறைவுள்ளது என்பதே கேள்வி.

நிறையைக் காண முடியுமா?

கண்டது உண்மையா?

ஏற்க முடியுமா?

ஏற்றது உண்மையா?

கண்டதும், ஏற்றதும் உண்மையானால் நாம் அன்னையைத் தேட வேண்டாம்.

இரண்டு பெண்கட்கு யோகம் செய்யும் அம்சமிருந்தது.

அம்சமிருப்பது வேறு. அதைப் பயன்படுத்துவது வேறு.

✡ **அன்னை சூழல் Mother's atmosphere பிறர் மனதில் நம்மை இதமாக இருத்தி வைக்கும்.**

- 10 அல்லது 20 வருஷமாகப் பழகும் நண்பர்கள் ஒரு நேரம் வரும் பொழுது நண்பர் நடப்பதைக் கண்டு, ''இதுபோல் அவர் என்னை நினைக்கிறார் என எனக்குத் தெரியாது'' என்பதுண்டு.
- நம்மையறியாமல், அவரும் அறியாமல் நம் மீது பிறருக்குப் பிரியம் ஏற்படுவதுண்டு. அன்னை சூழல் தவறாது அதைச் செய்யும்.
- மனித உறவில் நாமறிந்த கோளாறுகள் ஏராளம். அவற்றிற்கு எதிரானவை அனைத்தையும் தவறாது உற்பத்தி செய்வது **Mother's Force**. அன்னை சக்தி.
- அன்னையை மட்டும் நினைத்து, ஆழமாக நினைத்து, ஒரு நாள் சமையல் செய்தால் அது அமிர்தமாக இருக்கும்.
- ஜடமான சாப்பாட்டிற்கு இந்தக் குணம் receptivity உண்டு. மனிதர்கட்கு இது ஏராளம். 3 நாள் இடைவிடாமல் ஒருவரை *அன்னை மூலம்* நினைத்தால் அவர் நம் மீது உருகிக் கரைந்து விடுவார்.



- பிரார்த்தனை பலிப்பதைவிட நாம் அன்னையை நெருங்கி வர வேண்டும்.
- அன்னை நம்மிடம் இருப்பதைப் போல் நாம் அவரிடம் இருக்கிறோமா?
- நாம் அன்னையை நினைப்பதைவிட உருக்கமாக அவர் நம்மை நினைக்கிறார். இது அன்னையின் கருணை.
- நாம் அவரை விட்டு விலகினால் அவர் நெருங்கி வருகிறார். விலகுபவனை விரும்பி நெருங்குவார் அன்னை.
- அதைவிட நாம் அன்னை பின்னே போகும்பொழுது, எட்டாமல் கிட்டேயிருப்பது நெருக்கமான உறவு.

✡ **ஊறிய பழக்கம்**

- ஜீரணம், இரத்த ஓட்டம், நடப்பது, பேசுவது போன்று நம் கவனமில்லாமல் நடப்பவை (subconscious habits) ஆழ்ந்து நம்முள் ஊறிய பழக்கங்கள்.
  - தெரிந்து கற்ற (conscious habits) பழக்கத்தைக் கண்ட்ரோல் செய்யலாம். ஆழ்ந்த பழக்கங்கள் (sub-conscious habits) நம் கண்ட்ரோலில் இருக்காது. நம் கண்ட்ரோல் பிறர் இல்லை, ஊர் உலகமில்லை, கண்ட்ரோலில் இல்லாதது கண்ட்ரோலில் வருவது யோகம்.

    அது நடக்க நாம் (conscious habits) தெரிந்து செய்பவை, ஒழுங்காக அடுக்கி வைப்பது, உபசாரம் செய்வது, டிரஸ் செய்வது, சாப்பிடுவது போன்றவை முழு கண்ட்ரோலுக்கு வந்த பிறகுதான் ஆழ்ந்தவற்றைக் கண்ட்ரோல் செய்ய முயலலாம். எல்லா ஆழ்ந்த பழக்கங்களும் (sub-conscious habits) நம் கண்ட்ரோலுக்குள் வருவது யோகம்.

ஹடயோகி இதயத் துடிப்பு (heart beat), மூச்சு விடுவதை 15 நாள் நிறுத்த முடிகிறது.

- பூரணயோகம் என்பது மனம், ஊர், உலகம், பிரபஞ்சம் ஆகியவை ஒருவர் ஆன்மாவுக்குக் (Spirit) கட்டுப்படுவது. ஏனெனில் ஒருவர் ஆன்மா உலகத்தின் ஆன்மா. நளாயினி சூரியனைக் கட்டுப்படுத்தினாள். அனுசூயா திருமூர்த்திகளை மாற்றினாள். அது தபோ வலிமை. பூரணயோகத்தில் அது இயல்பாக ஏற்பட வேண்டும்.
- ஒரு ஆழ்ந்த பழக்கத்தை (sub-conscious habits) e.g. கையெழுத்து handwriting - முயன்று மாற்ற முடியுமா? அது அவசியமில்லை. முடிந்தால் நமக்கு யோகம் பலிப்பதாகப் புரிந்து கொள்ளலாம். இது மிக உயர்ந்த சோதனை.

✡ **அறிவில்லாதவன், கூலிக்காரன், சிறுவன் செய்யும் தவறு தவறல்ல.**
**படித்தவன், முதலாளி, பெரியவர் செய்யும் பெரிய தவறும் அளவுக்குட்பட்ட தவறு - தவறல்ல.**

- தவறு, செய்பவனைப் பொருத்தது, செயலைப் பொருத்ததில்லை.
- தவறு என்பதைத் திறமை எனக் கொண்டு யோசனை செய்தால் **சாதிப்பது செய்பவனைப் பொருத்ததாகும்**.

  குழந்தை உடைப்பதை நாம் குற்றமாகக் கொள்வதில்லை.

  தலைகீழே மாற்றி யோசனை செய்தால்,

  பெரியவர் செய்யும் பெரிய காரியத்தைப் பாராட்டத் தேவையில்லை என்றாகும்.



அன்பர், யோகம் செய்பவர், அன்னை சூழலில் உள்ளவர் அளவு கடந்து திறமையுள்ளவர் (அதை நாம் உணருவதில்லை).

அவர் 1000 கோடி சம்பாதிப்பது பெரிய சாதனை ஆகாது.

இந்தத் தத்துவம் புரியுமா?

***சிறியவன் தவறு தவறில்லை.***
***பெரியவர் சாதனை பெரிதில்லை.***

அதனால் "100 ரூ." சம்பாதிப்பது அன்பருக்கு ஒரு சாதனையில்லை.

அதனால் அது முடியும்.

இதனுள் உள்ளது தத்துவம். தத்துவம் புரிந்தால் மனம் ஏற்கும்.

மனம் ஏற்றதை உணர்ச்சி ஏற்றால் காரியம் முடியும்.

அறிவு கூறுவது உணர்ச்சிக்குக் கசப்பாக இருக்கும். மருமகளுக்கு வீட்டு வேலை செய்ய வேண்டும் என்பது தெரியும், பிடிக்கவில்லை. ஏற்றுச் செய்ய ஆரம்பித்தால் வேலையில் ஆர்வம் வந்து வேலை மீது பிரியம் வரும்.

✡ **கவனம்**

- **பட்டேலும் நேருவும் 1947இல் மகாத்மா பேச்சை கேட்க மறுத்தனர்.**

  **1920 முதல் 1947 வரை மகாத்மா கூறுவதை அப்படியே ஏற்றனர்.**

  **அப்படி மகாத்மா அவர்களைக் கவனித்தார்.**

  **1947இல் மவுண்ட் பேட்டன் பட்டேலையும் நேருவையும்**

**கவனிக்க ஆரம்பித்தவுடன் மகாத்மா பேச்சை ஏற்க மறுத்தனர்.**

*Attention என்பதைக் கவனம் என்றால் சரியாக இருக்கும்.*

முழு அர்த்தம் புலப்படாது.

- எதற்கு, எவருக்கு கவனம் செலுத்தினாலும் விக்ரஹத்திலிருந்து காளி வெளிவருவது போல் தெய்வம் வெளி வரும்.
- ஒரு முரட்டு மனிதனை எடுத்து குறையை அறவே விலக்கி நிறைவுக்கு கவனம் செலுத்தினால் நிறைவு நிறையும். குழந்தை வளர்ப்புக்குரிய முறை அதுவே.

  ஒரு டம்ளருக்கு அது போன்ற கவனம் செலுத்தினால் டம்ளர் நமது பிரார்த்தனையைப் பூர்த்தி செய்யும்.

  ஏகலைவனுக்கு துரோணர் கொடுத்த கலை அது போன்றது.

  மனைவியைத் தெய்வமாக நினைக்க மனம் பிரபஞ்சம் முழுவதும் பரவ வேண்டும்.

  அது நிச்சயமாக யோகம் பலிக்கும் வழி.

  அம்மன நிலையில் மனைவி செய்வது இனிக்கும்.

  தவறு தவம் பெற்ற வரமாகும்.

  கெட்டது நல்லதாகத் திருவுருமாறும் பாதையிது.

### ✡ எது சரி

- **நடப்பதால் சரி.**
- **நடப்பதால் சரியாகாது.**

ஆன்மாவுக்கு 12 அம்சங்களுண்டு. மௌனம், சாந்தி,



ஞானம், ஐக்கியம், நன்மை, ஜீவியம், உறுதி, சந்தோஷம், அன்பு, அனந்தம், காலத்தைக் கடந்த நித்தியம். இவற்றுள் ஒன்றில் சிறப்பெய்துவது பெரியது. 12இலும் சிறப்பு யோகம் பலிப்பது. ஒரு அம்சம் (உ.ம்.) மௌனம் அல்லது சந்தோஷத்தை வாழ்வில் பூரணமாக்கினால் ஆத்மா க்ஷணம் பலிப்பதைக் காணலாம். அது கீழ்க்கண்டவாறு தெரியும்.

- உள்ளே பெரும் சித்தியாகும்.
- மனம் பூரித்து உயர்ந்து மலரும்.
- இறைவனின் ஸ்பர்சம் இதமாக ஆத்மாவைத் தொடும் உணர்வு.
- அனைவரையும் வணங்கத் தோன்றும்.
- ஆபாசத்துள் அழகு தெரியும்.
- எவரையும் முழுமையாக ஏற்கத் தோன்றும்.
- சாதாரண புடவை அழகாகத் தெரியும்.
- அழுக்கும், குப்பையுமான மேஜை தூய்மையாகத் தோன்றும்.
- பொய் வெட்கம் தரும்.
- கனத்த மௌனம் காத தூரம் வரை தெரியும்.
- "சொந்த பாஷை" பேச முடியாதது விளங்கும்.
- கண் சுயம் பிரகாசம் பெறும். இதெல்லாம் மனத்தைத் தொடாது.
- "100 ரூ." தேடி வரும். அது புரியும்.

  பொருளாக வருவது உண்மை. மற்றதெல்லாம் உண்மையை நோக்கிப் போவது.

*தொடரும்....*

❋❋❋

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

246. *பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்.*

**பொன்னான பெண்ணின் கோணல்.**

247. *மதில் மேல் பூனை போல.*

**பூனை நாம் நினைத்தபடி குதிக்கும்.**

248. *உட்சுவர் இருக்க, புறச்சுவர் பூசலாமா?*

**அகமிருக்க புறம் செயல்படலாமா?**

249. *பழம் பழுத்தால் மரத்திலே தங்காது.*

**அன்னை பார்வை பட்டபின் அருள் தாமதிக்காது.**

250. *மலையத்தனை சாமிக்குக் கடுகத்தனை கற்பூரம்.*

**மலையத்தனை பலனுக்குக் கடுகத்தனை சமர்ப்பணம்.**

தொடரும்....

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னைத் தவறு என அறியும் தன்மை
மனிதனுக்கில்லை.



# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

### 7. முழுமையான செலவு

'முறையான செலவு' என்ற தலைப்பில் 'எந்தப் பொருளையும் விரயம் செய்யக்கூடாது' என்று குறிப்பிட்டிருந்தேன். பொருளை அலட்சியமாகவும், சிறு நோக்கங்களுக்காகவும் செலவு செய்வது விரயமாகும். அப்படிச் செய்வது தவறு. அதைப் போலவே, நியாயமாகச் செலவு செய்ய வேண்டியதை முழுமையாகச் செலவு செய்யாமல், அரைகுறையாகச் செய்வதும் தவறு.

உதாரணமாக, 'உழைப்பை' எடுத்துக் கொள்வோம். விவசாயியின் தொழில் பயிரிடுவது. அவன் நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் பயிர் செய்துவிட்டு, மீதியைத் தரிசாகப் போடுவது வருந்தத்தக்க தவறாகும். வீட்டை நிர்வகிக்கும் தலைவி இரண்டொரு முக்கியமான காரியங்களைச் செய்துவிட்டு, மற்றவற்றைச் செய்யாமல் விட்டுவிடுவது பொறுப்பற்றதனமாகும். நிறுவனப் பணியாளர்கள் அவசரமான பணிகளை மட்டும் செய்துவிட்டு, மற்றவற்றைக் கிடப்பில் போடுவது முறையற்ற செயலாகும்.

கையில் உள்ள பொருளை முழுமையாகவும், முறையாகவும் உபயோகிக்காமல், 'பொருள் இல்லை' என்று கூறி ஒதுங்குவதும், ஒதுக்குவதும் தவறு.

முழு உழைப்பைக் கொடுக்காதவர்களுக்கும், கையில் உள்ள பொருளை முறையாகவும், முழுமையாகவும் செலவு செய்யாதவர்களுக்கும், போதிய பொருட்செல்வம்

கிடைப்பதில்லை. தவற்றை உணர்ந்து திருத்தம் பெற்றால் செல்வம் தடைப்படாமல் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

அது தமிழ்நாட்டில் சிமெண்டுக்குத் தட்டுப்பாடு இருந்த காலம். ஒரு விவசாய அன்பர், தம் தோட்டத்தில் சிமெண்டால் வாய்க்கால் அமைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்று திட்டமிட்டார். தாசில்தாரை அணுகித் தம் தேவையைக் கூறி, சிமெண்டுக்குப் பெர்மிட் வழங்குமாறு விண்ணப்பித்தார். "உங்களுக்கு முன்னால் 500 பேர்களுக்கு மேல் சிமெண்டுக்காகக் காத்திருக்கிறார்கள். உங்களுக்கு ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் சிமெண்ட் கிடைக்கும்'' என்று கூறிவிட்டார் தாசில்தார்.

அன்பர் அத்தனைக் காலம் காத்திருக்கத் தயாராகயில்லை. 'நம் தோட்டத்தில் ஏற்கனவே வாங்கி உபயோகிக்காமல் எங்காவது சிமெண்ட் மிச்சம் இருந்தால், அதைத் தேடிக் கண்டுபிடித்து உபயோகித்துவிடுவோம்' என முடிவு செய்து, முயற்சியில் இறங்கினார்.

அந்த முயற்சியின் பலனாக, மூன்று மூட்டை சிமெண்ட் அங்கும் இங்குமாகக் கவனிக்காமல் விடப்பட்டிருந்தது தெரியவந்தது. அதைச் சேகரித்துக் கட்டுமான வேலையைத் தொடங்கிவிட்டார் அன்பர். அப்பொழுது அவர் ஒரு தீர்மானம் செய்துகொண்டார்: 'முன்னைப்போல இனி வாங்கும் சிமெண்ட் மூட்டைகளை முறையாகவோ அல்லது முழுமையாகவோ உபயோகிக்காமல் இருக்கக்கூடாது' என்பதுதான் அந்தத் தீர்மானம்.

இதற்குள் மூன்று நாட்கள் முடிந்துவிட்டன. இருப்பில் இருந்த மூன்று மூட்டை சிமெண்டும் தீர்ந்துவிட்டது. 'இனி சிமெண்டுக்கு எங்கே போவது? தாசில்தாரின் பெர்மிட்டுக்காக இன்னும் ஆறு மாதங்கள் காத்திருக்கத்தான் வேண்டுமா?' என்றெல்லாம் மாய்ந்து மறுகினார் அன்பர்.



நான்காவது நாள். அன்பரின் தோட்டத்தில் வேலை செய்துவருபவரின் உறவினர் ஒருவர், தம்மிடம் மூன்று மூட்டை சிமெண்ட் இருப்பதாகவும், அதை விற்க விரும்புவதாகவும் அன்பருக்குச் செய்தி அனுப்பினார்.

எதிர்பாராமல் கிடைத்த செய்தி! அன்பர் விடுவாரா? வாங்கிப் போட்டார். கட்டுமான வேலை தடைப்படாமல் தொடர்ந்தது. மேலும் மூன்று நாட்கள் சென்றதும் அதே பிரச்சினை. வாங்கிய மூன்று மூட்டை சிமெண்டும் தீர்ந்து போயிற்று. இனி வழி என்ன?

''சிமெண்ட்தானே? நாங்கள் தருகிறோம்'' என்று கூறிக்கொண்டே இருவர் வந்தார்கள். ஒருவர் பதினைந்து மூட்டைகளும், மற்றொருவர் ஐம்பது மூட்டைகளும் கொடுத்தனர். 'சும்மா இல்லை, விலைக்குத்தான்' என்றாலும், அந்த நெருக்கடியான காலத்தில் அவர்கள் கொடுத்ததற்குப் பெயர் சிமெண்ட் இல்லை; வரம்.

பிறகென்ன? தாசில்தார் இல்லாமல், பெர்மிட் இல்லாமல் தடையின்றிச் சிமெண்ட் கிடைக்க, அன்பரின் வாய்க்கால் வேலை நல்லவிதத்தில் நடந்து முடிந்தது. 'அது எப்படி நடந்து முடிந்தது?' என்று வியந்துபோனார் அவர்.

இதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் விவரித்துரைப்பதற்கு ஒன்று உண்டு. 'கையிலிருக்கும் சிமெண்டை வீணாக்காமல், முழுமையாக உபயோகிக்க வேண்டும்' என அவர் முடிவு எடுத்துச் செயல்பட்டவுடன், தட்டுப்பாடான காலத்திலும் அவருக்குத் தேவையான சிமெண்ட் மூட்டைகள் தட்டுப்பாடின்றிக் கிடைத்துவிட்டன.

*தொடரும்....*

❋❋❋

# கயமைக்குப் பரிசு

M. மணிவேல்

"ஹலோ பரஞ்ஜோதி, எப்படி இருக்கிறாய்?"

"நல்லா இருக்கிறேன், பலராம்".

"ஆமாம், நீ வேலையை விட்டுவிட்டாயாமே! நிஜந்தானா?"

"ஆம் பலராம், உண்மைதான்".

"ஏன்?"

"பிறகு சொல்கிறேன், சந்தர்ப்பம் வரும்போது".

ஏற்கனவே மனம் குழம்பிய நிலையில் இருக்கும்போது, வேலையை ராஜினாமா செய்த விஷயத்தைப் பற்றி தொலைபேசியில் பலராமன் விசாரித்ததும், பரஞ்ஜோதியின் மனம் மேலும் சலனம் அடைந்தது. ஆழ்ந்த சிந்தனையில் உட்கார்ந்துவிட்டார். தலைக்கு மேலே மின்விசிறி மெதுவாகச் சுழன்று கொண்டிருந்தது. அதைப் போலவே பரஞ்ஜோதியின் மனமும் பின்நோக்கிச் சுழன்றது.

தன்னுடைய பிறந்த சூழ்நிலை, மற்றும் பிறப்பு, வளர்ப்புப் பற்றிய நினைவுகள் இப்பொழுது கடும் வேதனையாக இருந்தது.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, இளமையிலேயே தகப்பனாரை இழந்து, தன் குடும்பம் பட்ட கஷ்டங்களைப் பற்றிய நினைவுகள், அலைஅலையாக மோதிக் கொண்டிருந்தன.

தாயார் கஷ்ட ஜீவனத்தில் என்னை எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு வளர்த்தார்! பல வீடுகளுக்குப் போய் பாத்திரம் தேய்த்து, துணிகள் துவைத்து, எடுபிடி வேலைகள் செய்து, சொற்ப வருமானத்தில் ஜீவனம் நடத்தித் தாயார் தன்னை



வளர்த்ததை நினைத்து மனம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்தது. கல்வியோ, பிளஸ் டூ படிப்புக்கு மேல் தொடர முடியவில்லை. அம்மாவுக்கு வயதாகிவிட்டது. வீடுகளுக்குச் சென்று வேலை செய்வதற்குச் சக்தி இல்லை. நின்றுவிட்டார். அம்மா வாழ்க்கையும் முடிந்துவிட்டது. வாழ்க்கையில் எந்தச் சுகமும் அனுபவிக்கவில்லை. யாருடைய ஆதரவும் இல்லாத நிலையில், கடலில் தத்தளிக்கும் சிறு துரும்புபோல் மனம் தத்தளித்தது. விரக்தியும், சலிப்பும் மனத்தில் குடிகொண்டன. திக்கற்ற இளம் பிராயத்தில் ஆறுதல் கூறுவார் யாரும் இல்லை. ஆதரவு தருவாரும் யாரும் இல்லை!

சிதம்பரத்தில் தூரத்து உறவுக்கார அம்மா ஒருவர் இருந்தது நினைவுக்கு வந்தது. அவரைப் போய் பார்த்து ஏதாவது உதவி கேட்கலாம் என்று தோன்றிற்று. சிதம்பரத்துக்குச் சென்று அவரைப் பார்த்ததும், அவர் என் கஷ்ட நிலையைக் கண்டு மிகவும் வருந்தினார்.

அந்த அம்மா சொன்னார், "இங்கு அண்ணாமலை நகரில் எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவருக்குத் திருச்சியில் ஒரு யோகியைத் தெரியும். அவர் மூலமாக அந்த யோகியைப் பார்த்தால், நமக்கு ஏதாவது ஒரு விமோசனம் கிடைக்கும். அண்ணாமலை நகருக்கு வா போகலாம்'' என்று அந்த பிரமுகரிடம் அழைத்துச் சென்றார். அவரிடம் என்னுடைய கஷ்ட நிலையைப் பற்றிச் சொன்னார்.

அந்த அன்பர் கூறினார், ''பரஞ்ஜோதி, இந்த அம்மா உனக்குக் கூறியது போல் திருச்சியில் ''சக்தி பீடம்'' ஆசிரமம் உள்ளது. அதை நடத்தும் ஞானயோகி என்பவரைப் பார்த்தால், அவர் உன் கஷ்டங்கள் நீங்குவதற்கு நல்ல உபாயங்கள் சொல்லுவார்''. அவர் மேலும் சொன்னார், ''அந்த ஞான யோகியானவர் நம்முடைய பாரம்பரியமான பழைய கலாச்சாரங்கள், பழைய சம்பிரதாயங்களைப் பின்பற்றி,

சாஸ்திரங்கள் கூறும் கர்மானுஷ்டானங்களை உறுதியாகப் பின்பற்றி வந்தார். தெய்வ வழிபாடு, விக்கிரக ஆராதனை, பூஜை புனஸ்காரங்கள், யாவற்றையும் தன் ஆசாரமாகக் கொண்டிருந்தார். அவர் ஒரு முறை சுற்றுலாப் பயணமாகப் பாண்டிச்சேரிக்குச் சென்றார். அங்குள்ள ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்துக்குப் போனார். அங்கே பக்தர்கள் க்யூ வரிசையில் நின்று கொண்டு, ஸ்ரீ அன்னையின் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். இந்த யோகியும் காவி உடையுடன், க்யூ வரிசையில் போய் நின்று கொண்டிருந்தார். அன்னையைப் பார்த்ததும், "இவரா அன்னை'' என்று மனம் சப்புக்கொட்டியது.

இவருக்கு முன்னால் நின்று கொண்டிருந்தவர்களை தவிர்த்து, திடீரென்று அன்னையின் கருணையைப் பொழியும் பார்வை, இந்த யோகியின் மீது விழுந்தது. அன்னை புன்முறுவலித்து, இவரைப் பார்த்தார்.

அன்னைக்கு ஏற்கனவே தான் பரிச்சயமானவர் போன்று, அன்னையின் புன்முறுவல் உணர்த்துவதாக உணர்ந்தார். அன்னையின் திருமுகத்தில் ஒரு ஜோதி! சிரசைச் சுற்றி ஒரு ஒளிவட்டம்! இந்தக் காட்சி கனவா, நனவா, அல்லது மனப்பிரம்மையா! யோகிக்கு ஒன்றும் புரியவில்லை.

அன்னையிடம் நெருங்கியதும் யோகி, தன்னையறியாமல் அன்னையின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்தார். கண்கள் பனித்தன. நெஞ்சம் உருகிற்று. அன்னை இவரது கரங்களைப் பற்றிச் சிரித்த முகத்துடன் ஒரு மலரைக் கொடுத்தார். அன்னையின் ஸ்பரிசம் பட்டதும் அவருக்கு சில்லென்ற உணர்வு உடல் பூராவும் பரவிற்று. விவரிக்க முடியாத ஒரு ஆனந்தப் பரவசம்! யோகி நினைத்தார், ''இவர் தெய்வ அம்சம் பொருந்திய தெய்வீக அன்னையே! இவரே ஜகன்மாதாவான பரமேஸ்வரி!'' இவ்வாறு எண்ணியவாறு அன்னையை மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு திரும்பிவிட்டார்.



அன்றிலிருந்து யோகியானவர் பழைய சம்பிரதாயங்களை விட்டுவிட்டார். ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை இவர்களைத் தெய்வமாக ஏற்று வழிபடத் தொடங்கினார். ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்திலிருந்து ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னையின் அனைத்து நூல்களையும் வாங்கிப் படித்தார்.

அன்னையைப் பார்த்ததிலிருந்து அவர் முற்றிலும் மாறிவிட்டார். அதன் பிறகுதான் அவர் சக்தி பீடம் ஆசிரமத்தைத் தொடங்கினார். அங்கு வரும் பக்தர்களுக்கு அன்னையின் அவதாரச் சிறப்பையும், ஸ்ரீ அரவிந்தரின் யோக மகிமைகளைப் பற்றியும் கூறி, அவர்களை வழிபட்டால் பிரச்சனைகள், துன்பங்கள் யாவும் நீங்கிவிடும் என்று சொல்லி ஆசி வழங்குவார். இதுவரையில் அன்னையை அறிந்திராத தமிழ்நாட்டு மக்கள், அன்னையிடம் நெருங்கி வர ஆரம்பித்தார்கள். அன்னை மீது நம்பிக்கை வைத்து வழிபட்ட அன்னை அன்பர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள் அன்னையின் அருளால் நீங்கிய விதத்தையும், அவர்கள் பெற்ற பலன்களையும், நன்மைகளையும் அறிந்த மக்கள் சக்தி பீடம் ஆசிரமத்துக்கு நாளுக்கு நாள் அதிக அளவில் வர ஆரம்பித்தார்கள்''.

அண்ணாமலை நகர் அன்பர் மேலும் கூறினார், ''பரஞ்ஜோதி, இதுவரையில் நான் அந்த மஹானின் விருத்தாந்தையெல்லாம் சொல்லிவிட்டேன். நீ போய் அவரைப் பார். உன் கஷ்டங்களைச் சொல். நல்ல வழிகாட்டுவார். நீ அவரைத் தரிசித்த மாத்திரத்திலேயே உனக்கு நல்ல காலம் பிறக்கும்".

அந்த அன்பர் சொன்னவைகளையெல்லாம் நன்கு கேட்டறிந்த பின், நான் திருச்சி பயணத்தை ஒரு நாள்கூட ஒத்திப் போடவில்லை. உடனே திருச்சிக்குப் பயணித்தேன்.

திருச்சியில் அந்த மஹானை தரிசித்தேன். என் கஷ்டங்கள் யாவற்றையும் அவரிடம் கூறினேன். அவர் என் தலையைத்

தொட்டு ஆசிர்வதித்தார். அவருடைய ஸ்பரிசம் பட்டதும் மனதில் ஒரு சாந்தி ஏற்பட்டது. அவர் சொன்னார், "அன்னையிடம் பூரணமாக நம்பிக்கை வைத்து, அவரைத் தெய்வமாக ஏற்று வழிபட்டால், உன் கஷ்டங்கள் யாவும் தொலைந்துபோகும். எல்லாத் துன்பங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்''.

''சுவாமி, உங்கள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது. நீங்கள் கூறிய அறிவுரைகளை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டேன். இன்று முதல் நான் அன்னையைத் தெய்வமாக ஏற்று வணங்குகிறேன். நான் எவ்வித ஆதரவும் இல்லாமல் இருக்கிறேன். தாய், தந்தையரை இழந்த நான் அனாதையாக, வாழ்வதற்கான வழி தெரியாமல், தத்தளித்துக் கொண்டு இருக்கிறேன். என்னை ஆசிர்வதியுங்கள். என் ஜீவனத்திற்கு ஒரு வழியும் இல்லாததால், இங்கே ஏதாவது ஒரு வேலை கொடுத்தால் பிழைத்துக் கொள்வேன்''.

கஷ்ட நிலையிலிருந்த என்னை, அவர் கருணையுடன் பார்த்து புன்முறுவலித்தார். அவர் கூறினார், ''இந்த ஆசிரமம் கம்பெனி போன்றது அல்ல. கம்பெனி கொடுக்கும் சம்பளம் போல் இங்கு அதிகச் சம்பளம் கொடுக்க இயலாது. சொற்ப சம்பளத்தில் வேலை தருகிறேன். உன் இஷ்டம் போல் செய்''.

அந்த மஹானின் வார்த்தைகள் எனக்குப் பெரிய தைரியத்தைக் கொடுத்தது. அவர் கூறியதற்கு மறுப்பு தெரிவிக்காமல், ''சரி'' என்று ஏற்றுக்கொண்டேன்.

திக்கற்றவனாக இருந்த நான், இந்த நேரத்தில் இந்த அரிய வாய்ப்பு கிடைத்ததை ஒரு பெரிய அதிர்ஷ்டமாகக் கருதினேன்.

ஸ்தாபனம் கொடுக்கும் வேலைகளை மிக்க சிரத்தையுடன் மனப்பூர்வமான, சேவை மனப்பான்மையுடன் செய்து வந்தேன். சில மாதங்கள் கழித்து ஒரு நாள், திடீரென்று ஸ்தாபனத் தலைவரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. எதற்காகக்



கூப்பிடுகிறார்? என் வேலையில் ஏதாவது தவறு செய்து விட்டேனா? என்று பயந்த சுபாவத்துடன் அவர் முன் போய் நின்றேன்.

அவர் புன்முறுவலுடன், ''நாளையிலிருந்து நீ வெளியில் வாடகை ரூமில் தங்க வேண்டாம். ஆபீசிலேயே தங்கிக்கொள். மற்றும் உன் சாப்பாட்டுச் செலவையும் ஸ்தாபனமே ஏற்றுக் கொள்ளும்'' என்றார். என்னால் ஒன்றுமே நம்ப முடியவில்லை. மனம் சந்தோஷத்தால் திக்குமுக்காடியது. பேசுவதற்கு வார்த்தைகள் வரவில்லை. கண்களில் நீர் தளும்பியது. அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தேன். பின்பு மகிழ்ச்சியில் திளைத்த உள்ளத்தோடு திரும்பினேன். ஆபீசில் உள்ளவர்கள், எனக்கு ஏதோ 'டோஸ்' கிடைத்திருக்குமென்று நமுட்டுச் சிரிப்புடன் பார்த்தார்கள். நான் ஒன்றும் பேசாமல் என் வேலையில் மும்முரமானேன்.

அன்றிலிருந்து எனக்கு இட்ட பணிகளை மேலும் மிகுந்த உற்சாகத்துடன், குறை ஒன்றுமில்லாமல் செய்து வந்தேன். அன்னைக்கு நன்றி தெரிவித்து தினமும் அன்னையிடம் பிரார்த்தனை செய்து வந்தேன்.

காலம் செல்லச் செல்ல ஸ்தாபனம் விரிவடைந்தது. நாளடைவில் அன்னை சேவை தொடர்பான பணிகள் அதிகரித்தன. அன்னை, மற்றும் ஸ்ரீ அரவிந்தருடைய கருத்துகளைப் பற்றிய புத்தகங்கள் வெளியிடுவது, மற்றும் விவசாயம், கல்வி, ஆராய்ச்சி, போன்ற துறைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு ஸ்தாபனம் வளர்ச்சி அடைந்தது.

திரு. ஞானயோகி அவர்கள், ஸ்ரீ அரவிந்தர், அன்னை அவர்களின் கோட்பாடுகளையும், கருத்துகளையும், அவர்களின் ஆன்மீக இலட்சியத்தின் மகத்துவத்தைப் பற்றியும் பிரபலப்படுத்தி எழுதிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன. ஸ்ரீ அரவிந்தரின் நூல்களைப் பற்றிய விளக்கங்கள்,

கட்டுரைகளும் வெளிவந்தன. லைப் டிவைன், சாவித்ரி நூல்களில் உள்ள கருத்துகள் எளிதான விளக்கங்களுடன் கட்டுரைகளாக வெளிவந்தன. இதனால் அன்பர்கள் இப்புத்தகங்களைப் படிக்கும்படியாக ஊக்குவிக்கப்பட்டனர். தமிழில் புத்தகங்கள் வெளியிடப்பட்டு வந்ததால், தமிழ்நாடு ஸ்ரீ அன்னையைப் பற்றி அறியும் வாய்ப்பைப் பெற்றது. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தில் உள்ள சாதகர்களுக்கு, அன்னையின் அருள் கிடைப்பது போலவே இப்பொழுது தமிழ்நாட்டுக்கும் அன்னையின் பேரருள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

''சக்தி பீடம்'' ஆசிரமத்திலிருந்து வெளியிடப்பட்ட புத்தகங்களைப் படித்தவர்கள், அன்னையிடம் வந்த எண்ணற்ற பக்தர்கள் உண்டு. அன்னையின் அருளால் தங்களுக்குள்ள பிரச்சனைகள் தீர்ந்ததைப் பற்றி அநேக அன்பர்கள் "சக்தி பீடம்" ஸ்தாபகருக்கு எழுதிய கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டன. சிலர் அன்னையிடம் பெற்றுக்கொண்ட பலன்களுக்குக் கைம்மாறாக, அன்னைக்குச் சேவை செய்ய வேண்டுமென்று விரும்பி வந்தார்கள்.

இந்த ஸ்தாபனத்திற்கு வந்த பிறகு, நான் இந்த எல்லா விஷயங்களையும் நன்றாக, முழுவதையும் தெரிந்து கொண்டேன். இத்தகைய தெய்வீக அன்னை சூழலில் எனக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பை, அன்னைதான் ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும்.

இவ்வாறாக நல்ல சூழலில் என் வாழ்க்கைப் பயணம் சரியான திசையில் போய்க் கொண்டிருந்தபோது, ஏதோ ஒரு அசுர சக்தி குறுக்கிட்டு தீமையை இழைத்துவிட்டது.

இந்த ஸ்தாபனத்தில் எனக்குச் சில முக்கிய பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. இவற்றைச் செவ்வனே செய்து முடிப்பது என் கடமை. சக ஊழியர் ஒருவர், தன்னுடைய பணியைக் குறித்த காலத்துக்குள் முடிக்காமல் நிலுவையில் வைத்திருந்தார்.



எனக்குள்ள பொறுப்பின் காரணமாக அவர் மீது சற்றுக் கடுப்பாக, அதிகாரத் தோரணையில் கோபமாகப் பேசிவிட்டேன். அந்த ஊழியர், சற்றும் எதிர்பாராத வகையில், என்னை எதிர்த்து மரியாதை குறைவான வார்த்தைகளால் சாடினார். இதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இது எனக்குப் பெரும் அதிர்ச்சியாகவும், மிகுந்த அவமானமாகவும் இருந்தது.

அப்படியே சிறிது நேரம் உட்கார்ந்து அமைதியானேன். இந்த நிகழ்ச்சி, என் மனதில் திரும்பத் திரும்ப வந்து உறுத்திக் கொண்டே இருந்தது. மற்ற ஊழியர்களும் என்னைக் கர்வம் பிடித்தவன் என்று பேசிக்கொண்டதும் என் காதில் விழுந்தது. இவற்றையெல்லாம் என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மரியாதையை இழந்தபின், இந்த ஆபீசில் தொடர்ந்து இருக்க மனம் ஒப்பவில்லை.

ஆழ்ந்து சிந்தித்தபின், வேலையை விட்டுவிட முடிவு செய்தேன். நான் இந்த ஸ்தாபனத்தில் வேலை பார்த்ததின் பயனாக, கையில் கணிசமான தொகையும் சேமிப்புக் கணக்கில் இருந்ததால், வேலையை விடுவதற்குத் தைரியமாக இருந்தது. வேலையை விடுவதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. எனக்கு உணவு மற்றும் தங்குவதற்கு உறைவிடம் முதலான வசதியும் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட சலுகைகள், சில வருடங்களுக்கு முன் நிறுத்தப்பட்டுவிட்டன. எனக்கு அதிகச் சம்பளம் கொடுத்ததால் நிறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியும் என் மனதில் ஆழப்பதிந்து நெருஞ்சி முள்ளாகக் குத்திக் கொண்டிருந்தது. இது மனித சுபாவத்தினால் ஏற்படும் குணம்தான். நிறுவனத்தைப் பொறுத்தவரை சலுகையைத் திரும்பப் பெற்றது நியாயமாகத் தோன்றும். ஆனால் சலுகைகள் பெற்று, சுகத்தை அனுபவித்தபின், அது நிறுத்தப்பட்டதும் மனம் அவ்வளவு லேசில் ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம், பணத்தின் மேலுள்ள ஆசைதான்

என்ற போதிலும் நான் என் வருத்தத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் எப்பொழுதும் போல் வேலை செய்து வந்தேன்.

வாழ்க்கையில் ஒரு சிறு நிகழ்ச்சிகூட பிளவு ஏற்படுத்தி விடுகிறது. ''கோவலனும் மாதவியும் காவிரியில் நடைபெற்ற வசந்த விழாவிற்குச் சென்றார்கள். மாதவி பாடிய 'வாழி காவேரி' என்ற பாட்டால் பிணக்கு ஏற்பட்டு இருவரும் பிரிந்தார்கள்'' என்று நண்பர் ஒருவர் கூறியது நிதர்சனமாகப்பட்டது. **ஒரு சிறிய நிகழ்ச்சி என் வேலையை விடுவதற்கான காரணமாயிற்று**.

''காலத்தால் என்னென்ன நடக்குமென்று யாராலும் முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியாது. காலமானது எல்லாவற்றையும் கொடுக்கும். அதே காலம், கொடுத்ததைத் திரும்பவும் எடுத்துக்கொள்ளும்'' என்று நீதி நூல்கள் கூறுவது எவ்வளவு உண்மையான வார்த்தைகள்! காலத்தின் வலிமைதான் என்னே!

விஷயம் எதுவாக இருந்தாலும், வேலையை விடுவது என்ற தீர்க்கமான முடிவு எடுத்தபின், ஸ்தாபனத் தலைவரிடம் உடல் நலமின்மையைக் காரணம் காட்டி, அவருடைய சம்மதம் பெற்று வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டேன்.

நிறுவனத்தில் வேலை பார்த்ததற்கான பணப் பயன்கள் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு வரும்போது, என் வக்ரபுத்தி தலைதூக்கியது. ஆபீசில் வேலை செய்பவர்கள் மீது இருந்த வெறுப்பின் காரணமாக, அங்குள்ளவர்களைப் பார்த்து கோபமாக, தூஷணையான வார்த்தைகளால் தூற்றிவிட்டு வந்தேன்.

''இங்குள்ள அனைவரையும் பிடிக்கவில்லை. இந்த ஸ்தாபனமும் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று அநாகரிகமாகப் பேசிவிட்டு வந்தேன். இது எவ்வளவு அல்பத்தனம்! கர்வமான வார்த்தைகள்!

"பதட்டம், பரபரப்பு இல்லாத நிதானம், பொறுமை மிக மிக அவசியம். யார் மீதும் எப்படிப்பட்ட காரணத்தாலும் கோபப்பட்டால் நஷ்டம் நமக்குத்தான்'' என்பதை ஆத்திரத்தில் உணர முடியவில்லை.



ஆபீசில், அதிகாரத் தொனியை தவிர்த்து, பவ்வியமாகப் பேசியிருந்தால், வேலையை விட்டுவிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

''உயர்நிலையில் வாழ்க்கையை நடத்த விரும்புபவர்கள் தாழ்ந்த அம்சங்களை மாற்ற வேண்டுமென்ற அறிவுரைகள்'' என் அகந்தைக் கண்களால் மறைக்கப்பட்டிருந்தன.

நிர்கதியாய் இருந்த எனக்கு வாழ்வை அளித்த ஸ்தாபனத்தை நிந்தித்தது எவ்வளவு நன்றி கெட்ட செயல்! நன்றி கொன்றவன் நம்பத்தகுந்தவன் அல்லன். நன்றி கொன்றவனுக்குப் பிராயச்சித்தம் இல்லை.

ஆபீசில் வேலை செய்பவர்கள் அனைவரும் எவ்வளவு அன்பாகப் பழகினார்கள்! அதிகாரம் என்ற அகந்தையால் கோபமாகப் பேசியது எவ்வளவு முட்டாள்தனம்! ஒரு க்ஷணத்தில் நிதானத்தை இழந்ததால், கோபமும் அகந்தையும் சுமுகத்தைக் குலைத்தது. "அகந்தை சுமுகத்தை வரவிடாமல் தடுக்கும்" என்ற உண்மை என் வாழ்க்கையில் அப்படியே பலித்துள்ளதே! ஆச்சர்யம்!

இப்பொழுது என் தவறுகளையெல்லாம் உணர்ந்து விட்டேன். அன்னையிடம் மன்னிப்புக் கேட்க தீர்மானித்தேன். பிரார்த்தனை செய்ய உட்காரும்போது கரண்ட் போய்விட்டது.

அன்னை முன் உட்கார்ந்து பிரார்த்தனையில் எல்லா நிகழ்ச்சிகளையும் ஒவ்வொன்றாக அன்னைக்குச் சமர்ப்பித்து, மனம் உருகிப் பிரார்த்தனை செய்தேன். அன்னையிடம் மன்னிப்புக் கேட்டேன்.

***"அன்னையே! அலுவலக வேலை நிமித்தமாக***
***கோபத்தின் பிடியில் சிக்கி பேசியது;***

*அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களைத்*
*தரக்குறைவாகப் பேசியது;*
*ஸ்தாபனத்தைக் குற்றமான வார்த்தையால் பேசியது*
*யாவும்,*
*என் கெட்ட சுபாவத்தால் நடந்துவிட்டது.*
*இந்தத் தவற்றையெல்லாம் உணர்ந்துவிட்டேன்.*
*என்னுடைய செயலுக்கு வருந்துகிறேன்.*
*அன்னையே உங்கள் கருணை உள்ளத்தால் என்னை*
*மன்னித்துவிடுங்கள்!*
*ஸ்தாபனமே! அலுவலக அன்பர்களே!*
*என் அகந்தையால் உங்களைக் கடுஞ்சொற்களால்*
*உங்கள் உள்ளத்தைக் காயப்படுத்திவிட்டேன்.*
*என் குற்றத்தை உணர்ந்துவிட்டேன். என்*
*செயலுக்காக*
*நான் மிகவும் வருந்துகிறேன்.*
*எல்லோரும் என்னை மன்னித்துவிடுங்கள்!"*

இவ்வாறாக, என்னுடைய தவற்றையெல்லாம் உணர்ந்து, அன்னையிடமும், அலுவலகத்தில் வேலை பார்க்கிறவர்களிடமும், ஸ்தாபனத்திடமும் மானசீகமான பிரார்த்தனையில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். ஆழ்ந்த தியானத்திலிருந்து கண் விழித்ததும் கரண்ட் வந்துவிட்டது.

அப்பொழுது தொலைபேசி ஒலித்தது. நான் வேலை பார்த்த ஸ்தாபனத்தின் ஆபீசிலிருந்து, ஆபீஸ் மேலாளர் பேசினார். ''பரஞ்ஜோதி சார், எப்படி இருக்கிறீர்கள்? நலமாக இருக்கிறீர்களா?'' என்று சம்பிரதாயமாகக் குசலம் விசாரித்துவிட்டு, மேலும் கூறினார்:

''நமது நிறுவனத் தலைவர் உங்கள் மீது மிகவும் இரக்கங் கொண்டு கருணை தொகையாக ரூ.5 லட்சம் வழங்கும்படி உத்தரவு போட்டிருக்கிறார்கள். அலுவலகம் இயங்கும் நாட்களில்



ஏதேனும் ஒரு நாளில் நீங்கள் நேரில் வந்து காசோலையைப் பெற்றுக் கொள்ளுங்கள்''.

இந்த எதிர்பாராத செய்தி என்னை மிகுந்த ஆச்சர்யத்தில் மூழ்கடித்தது. ஸ்தாபனத் தலைவருக்கு அப்பொழுதே என்னுடைய நன்றியினை மானசீகமாக தெரிவித்துக் கொண்டேன். அன்னைக்கும் அவ்வாறே நன்றி கூறினேன்.

என்னுடைய **கயமைக்கு**[1] அன்னை பரிசு வழங்கியுள்ளார்கள் என்றால், அது அன்னையின் பேரருளன்றி வேறு என்னவாக இருக்க முடியும்! அன்னையின் கருணையே, கருணை!

***தவற்றை உணர்ந்ததும் அது நம்மை அன்னையிடம்***
***நெருங்க வைக்கும்.***
***மனம் மாறிய நேரம், அன்னை நம்மிடம் வருவதை***
***அறிகுறியாக கரண்ட் காட்டும்.***

*முற்றும்.*

❋❋❋

[1]**கயமை** – *நற்குணம் ஏதும் இல்லாத கீழ்மக்களின் தாழ்மை.*

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வெளிப்படாத சொல் வேகமுடையது.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சத்தியம் பாதுகாப்பின் கோட்டை.

# நல்லெண்ணத்தைப் பற்றிய குறிப்புகள்

N. அசோகன்

1. நல்லெண்ணம் என்பது வெளிநோக்கிச் செல்கின்ற ஒரு உணர்வாகும். அதாவது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துகிற நபர் தன்னைத் தவிர அடுத்த ஒருவரைப் பற்றி நினைத்து அவருக்கு நல்லது நடக்க வேண்டும் என்று இவர் விழைகிறார்.
2. நல்லெண்ணம் என்பது பாத்திரத்தின் கொள்ளளவுக்கு மேல் இருக்கின்ற தண்ணீர் வழிந்து ஓடுவதைப் போல நல்லெண்ணம் கொண்டவருடைய இதயத்தின் கொள்ளவுக்கு மேல் இருக்கின்ற அன்பும் பரிவும் வழிந்து ஓடுவதைக் காட்டுகிறது.
3. நல்லெண்ணம் கொண்டவர் மனோபலமும், பொருளாதார பலமும் கொண்டவராக இருந்தால் அடுத்தவர் மேல் காட்டும் அவருடைய நல்லெண்ணம் பலிப்பதற்கான சாத்தியக்கூறுகள் அந்த அளவிற்கு அதிகமாக இருக்கும்.
4. பரிசுத்தமான நல்லெண்ணம் வெறும் வாய் வார்த்தைகளாக வெளிப்படலாம். ஆனால் அதைவிட நல்லெண்ணம் பொருளாதார உதவியாகவும் physical help ஆகவும் வெளிப்படும் பொழுதுதான் மற்றவரிடையே வரவேற்பு அதிகமாக இருக்கிறது.
5. தெய்வத்தினுடைய நல்லெண்ணத்திற்கு அதனால் பயனடைகிற மனிதனுடைய நன்றியறிதலோ, அங்கீகாரமோ தேவையில்லை. ஆனால் மனிதன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும்பொழுது அடுத்தவருடைய நன்றியறிதலையும் பாராட்டையும் எதிர்பார்க்கிறான். மனித நல்லெண்ணத்தினுடைய மிகப்பெரிய குறைபாடாக இது அமைந்துவிடுகிறது.
6. விவேகமும், பாரபட்சமும் இல்லாத நல்லெண்ண வெளிப்பாடு ஆண்டவனுக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் மனிதன் பாகுபாடு தெரிந்துதான் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் தகுதி இல்லாதவர்க்கு உதவப் போய் வீண் பிரச்சனை தேடிக் கொண்டதாக வரும்.
7. நல்லெண்ணம் என்பது ஒருவருடைய பர்சனாலிட்டியை விரிவடையச் செய்யும் உணர்வாகும். இப்படி நல்லெண்ணம் கொண்டவருடைய பர்சனாலிட்டி மேலும் விரிவடையும் பொழுது அவரை நோக்கி அருளும், அதிர்ஷ்டமும் அதிகமாக வருவதற்கு இதுவே ஒரு காரணமாகவும் அமைகிறது.
8. நல்லெண்ணம் கொண்ட ஒருவரிடம் அடுத்தவர் வந்து தனக்கு ஒரு நல்லது நடந்திருப்பதாகச் சொல்லும் பொழுது முதலாமவருக்கு இது ஒரு வெறும் செய்தியாக இருந்தாலும் இவருக்கு அதில் எந்த ஆதாயமும் இல்லை என்றாலும் இரண்டாமவருக்கு என்ன சந்தோஷம் கிடைத்ததோ அதே சந்தோஷத்தை முதலாமவரும் அனுபவிப்பார்.
9. இயற்கையாக நல்லெண்ணம் உள்ளவரை மற்றவர்கள் சூழ்ந்து கொள்வார்கள். காந்தம் இரும்பை இழுப்பது போல நல்லெண்ணம் மற்றவர்களைத் தன் பக்கம் இழுக்கும்.
10. நல்லெண்ணம் உள்ளவர்களால் சூழப்பட்டவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பார்கள். ஆனால் கெட்ட எண்ணம் உள்ளவர்களால் சூழப்பட்டவர்களுக்கு இப்படி நீண்ட ஆயுள் அமைவது கடினம்.
11. அன்னையின் சூழலில் வாழ்பவர்கள் தங்களுடைய

நல்லெண்ணத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இந்த அருட்சூழலைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்படி அன்னையின் சூழலில் இல்லாதவர்கள் அவர் மூலம் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு இல்லாமல் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் பொழுது தேவையில்லாத ஏமாற்றங்களையும் பாதிப்புகளையும் சந்திக்கும்படி நேரிட்டு ஆரம்பத்தில் இருந்த நல்லெண்ணத்தை இழக்க நேரிடலாம்.

12. நல்லெண்ணம் உள்ளவர்கள் தொடங்கும் எந்த வேலையும் தொடர்ந்து வளரும். அவர்கள் தொடங்கும் எந்தத் திட்டமும் பெருவளர்ச்சியைக் காணும். அம்மாதிரியே யார் மேல் அவர்கள் கவனம் திரும்புகிறதோ அவர்கள் வாழ்வில் முன்னேறுவார்கள்.

*தொடரும்.....*

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அன்னையை ஏற்றால் அனைவரும் ஏற்பர்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

முரண்பாடே இரகசியம்;

உடன்பாடே வாழ்வு.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# *The Life Divine* லைப் டிவைன்

**(அத்தியாயச் சுருக்கம்)** **முதற் புத்தகம்**

1. இறைவனில் பிறந்த மனிதன் இறைவனையடைய ஆர்வம் கொள்கிறான்.
2. ஜடமும், ஆன்மாவும் ஒன்றானால் தெய்வீக வாழ்வு பிறக்கும்.
3. துறவி வாழ்வை மறுத்து பிரம்மத்தை நாடுகிறான்.
4. பரம்பொருள் உலகமாக மாறியது.
5. பரமாத்மாவையும் பாதாளத்தையும் இணைப்பது மனிதன் கடமை.
6. மனிதன் பிரபஞ்சத்திலும் பிரம்மத்திலும் உறைபவன்.
7. அகந்தை விருப்பு, வெறுப்பை ஏற்படுத்துகிறது.
8. உணர்வை விட்டு விலகினால் அறிவு ஞானமாகிறது என வேதாந்தம் கூறுகிறது.
9. சத் புருஷன் உலகமாகச் செயல்படுகிறான்.
10. உலகை இயக்கும் சக்தி உணர்ச்சியுள்ளது.
11. மனித தர்மம் வாழ்வுக்கில்லை.
12. ஆனந்தம் பொருள்களில் வளரும் ஆனந்தமாக வெளிப்படுகிறது.
13. மாயை அனைத்தையும் ஒன்றிலும், ஒன்றை அனைத்திலுமாகச் சிருஷ்டிக்கிறது.
14. உலகை மனம் சிருஷ்டிக்கவில்லை, சத்தியஜீவியம் சிருஷ்டித்தது.
15. சத்தியஜீவியம் காலத்தையும் இடத்தையும் உண்டு பண்ணிற்று.
16. சத்தியஜீவியத்திற்கு மூன்று நிலைகள் உள்ளன.
17. தெய்வீக ஆன்மா மேல் நோக்கிச் செல்லும் தெய்வம்.
18. மனத்தை சத்தியஜீவியம் சிருஷ்டித்தது.
19. வாழ்வு பிரபஞ்ச சக்தி.
20. மரணம் - வாழ்வுக்கு அமரத்துவம் அளிக்கிறது.
21. வாழ்வு மனத்தைக் கடந்து பூரணம் பெறும்.
22. வாழ்வு உயர்ந்து ஜீவியமாகும்.
23. மனிதனுக்கு இரு ஆத்மாவுண்டு.
24. ஜடம் ஜீவனின் ஆனந்தம்.
25. அஞ்ஞானம், தமஸ், பிரிவினை ஜடம் பூரணம் பெறத் தடையான சிக்கல்கள்.
26. ஏழு தத்துவங்களில் ஒரு சமயம் ஒரு தத்துவம் செயல்படும்.
27. சத், சித், ஆனந்தம், சத்தியஜீவியம், மனம், வாழ்வு, சைத்திய புருஷன், ஜடமாக மாறுகின்றன.
28. மேல் மனத்திலிருந்து உள் மனம் போய் உயர்ந்து சத்தியஜீவியம் அடைய வேண்டும்.

***எங்கும் நிறை பரம்பொருள் உலகமாக மாறுவது சிருஷ்டி.***

❋❋❋

# *The Life Divine* லைப் டிவைன்

**இரண்டாம் புத்தகம்** **முதற் பாகம்**

1. இறைவன் மனிதனானதால் மனிதனே முடிவுக்குரியவன்.
2. பிரம்மம், புருஷா, ஈஸ்வரா, மாயை, பிரகிருதி, சக்தி ஆகிய ஆறும் பிரம்மத்தின் பகுதிகள்.
3. மனிதனே பிரம்மம்.
4. உலகில் இறைவனுக்கு எதிரானவையில்லை.
5. கனவும் கானல் நீரும்[1] உண்மை.
6. உலகு மாயையில்லை, அஞ்ஞானம்.
7. அஞ்ஞானம் ஞானத்தின் மறு உருவம்.

8-9. நினைவு அஞ்ஞானத்தில் பெறும் அனுபவம் அகந்தை.

10. ஐக்கியம், ஞானம், அடிமன அறிவு, மேல் மன அறிவு என நான்கு வகை ஞானம்.
11. எழு வகை அஞ்ஞானம்.
12. மனம் தன் ஆதியான சத்தியஜீவியத்தை மறந்ததால் அஞ்ஞானம் உற்பத்தியாகிறது.
13. மேல்மனம் உற்பத்தியாகி அஞ்ஞானம் பூரணம் பெறுகிறது.
14. தீமை அகந்தையால், அதன் பிரிவினையால் உற்பத்தியாகிறது.

**இரண்டாம் பாகம்**

15. ஏகனோ, அநேகனோ முடிவில்லை. அவற்றை உட்கொண்ட பிரம்மமே முடிவு.
16. வாழ்வின் வகை நான்கு. இணைந்த வாழ்வை நாம் ஏற்கிறோம்.
17. பரமாத்மாவும் பாதாளமும் மனிதனில் இணையும்.
18. இணைந்தவை உயர்ந்து, திருவுருமாறி, பரமாத்மாவுடன் ஐக்கியமாகும்.
19. எழு வகை அஞ்ஞானம் எழு வகை ஞானமாக திருவுருமாறும்.
20. மறுபிறப்பின் தத்துவம். பிறப்பால் ஆத்மா உடலுக்கு அமரத்துவம் வழங்குகிறது.
21. வேறு உலகங்கள் - இறப்பின் பின் பிறக்கும் வரை ஆத்மா தங்கும் லோகங்கள்.
22. ஆத்மா பெறும் அமரத்துவம்.
23. உடலின் பரிணாம வளர்ச்சியால் ஜனிக்கும் மனிதன்.
24. உடலின் திருவுருமாற்றத்தால் மனிதன் அடுத்தவனுக்கு ஆன்மீகப் பலன் தர முடியும்.
25. மூன்று திருவுருமாற்றம் - சைத்தியத் திருவுருமாற்றம், ஆன்மீகத் திருவுருமாற்றம், சத்தியஜீவிய திருவுருமாற்றம்.
26. ஆன்மீக மனம் வழி ஆத்மா சத்தியஜீவியம் சேர்வது.
27. சத்தியஜீவன்.
28. தெய்வீக வாழ்வு.

***அஞ்ஞானம் ஞானமாகி ஆன்மாவாவது பரிணாமம்.***

❋❋❋

1 hallucination

Vol. I Issue 10 January 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

## புதிய வெளியீடுகள்

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
N.Asokan

### கர்மயோகியின்

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

### சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

---

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

### கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆: (044)-24347191

Vol. I Issue 10 January 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஜனவரி 2012